விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 11 புதன்கிழமை (27.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 251

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் மகிந்த உரையாற்றக் கூடாது

### டெசோ அமைப்பு தீர்மானம் நிறைவேற்றம்



(சென்னை) ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உரையாற்ற அனுமதிக்கக் கூடாது எனவும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்தியாவில் விசாரணை நடத்த ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு அனுமதி வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டெசோ அமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

டெசோ அமைப்பின் அவசரக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இடம்பெற்ற போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்கள் வருமாறு,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் 25 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை உரையாற்ற ஐ.நா அனுமதிக்கக் கூடாது.

இலங்கையில் இடம்பெற்ற மனித வுரிமை மீறல்கள் குறித்து இந்தியாவில் விசாரணை நடத்தவேண்டும. அதற்காக ஐ.நா 19 ஆம் பக்கம் பார்க்க....

## ஈழக் கனவை கைவிடவில்லை

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஒரு தரப்பு இன்னமும் ஈழக்கனவை கைவிடவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கும்புறுபிட்டியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வந்த 19 ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் தொடர்பில் மீளாய்வு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களின் பொருளாதார நிலை, சமூகமயம் மற்றும் வாழவாதார நிலைமைகள் தொடர்பில் இதனூடாக கண் 19 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் இராஜதந்திர ரீதியாக மீனவர் பிரச்சினையை தீருங்கள்

### இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை அரசியல் ரீதியாக மற்றும் இராஜதந்திர ரீதியாக தீர்க்கப்பட வேண்டும் என்று இந்திய உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையில் நீதிமன்றம் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று கோரி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லோக சபா உதவி சபாநாயகர் எம்.தம்பிதுரை மற்றும் திராவிட முன்னேற்றக்கழக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் தாக்கல் செய்த மனு நேற்று இந்திய உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள், தமது மனுக்களில் இந்திய அதிகாரிகள், தமிழக மீனவர்களை நடுக்கடலில் இலங்கை கடற படையினரிடம் இருந்து காப்பாற்றுவதற்கு நடவடி 19 ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோரை மீட்கக்கோரி வவுனியாவில் 30-ம் திகதி பேரணி



(கொழும்பு)

காணாமல்போன உறவுகளைக கண்டுபிடித்து தருமாறு கோரி வவுனியாவில் பேரணியும், மாபெரும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் வை.தேவராசா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச காணாமல்போனோர் தினமாகும்.

இந்த தினத்தில் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் காணாமல்போனோரின் உறவுகளை ஒன்றிணைத்து மாபெரும் பேரணி ஒன்றினையும் பொது கூட்டத்தையும் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு பிரஜைகள் குழுக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா நகரசபை வரை பேரணியும் அதனைத் தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டும் என வலியுறுத்தி பாதிக்கப்பட்ட மக்கள சார்பாக அறிக்கை 19 ஆம் பக்கம் பார்க்க....

## விகாரைக்கு நிலம் சுவீகரிப்பு; முஸ்லிம்கள் திரண்டு எதிர்ப்பு

### புல்மோட்டைப் பகுதியில் பதற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டை பிரதேசத்திலுள்ள அரிசிமலையில் புனித பூமி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட காணி நில அளவீட்டுக்கு உள்ளூர் முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து நில அளவீட்டு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அந்த பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டதால் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டிருந்தது. அப்பகுதியிலுள்ள பௌத்த வழிபாட்டுத் தலமொன்றை மையப்படுத்தி புனித 19 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர் பிரதேசங்களிற்கு செல்வதால் பாப்பரசரின் விஜயம் முக்கியத்துவமானது

### வத்திக்கான் இணையத்தளம் தெரிவிப்பு



(வத்திக்கான்)

உலகிலேயே முதன் முதலில் தமிழர் பிரதேசங்களுக்கு பாப்பரசர் பிரன்ஸிஸ் செல்வதால் அவரது விஜயம் முக்கியம் பெறுகிறது என வத்திக்கானைத் தளமாகக்கொண்டுள்ள இன்சைடர் இணையத்தளம் தெரிவிததுள்ளது.

இலங்கையில் 26 வருடங்களாக சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் போர் இடம்பெற்ற பகுதியை அவர் தனது பயணத்துக்கான இடமாகத் தெரிவு செய்திருக்கிறார். இதனால் அவரது விஜயம் முக்கியம் பெறுகிறது எனவும் தெரிவித்துள்ளது.

அந்த இணையத்தளத்தில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் இலங்கைக்கு பாப்பரசர் பிரான்ஸிஸ் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின் போது பரிசுத்த பாப்பரசர் மடு தேவாலயத்துக்கும் விஜயம் செய்வார். இலங்கையில் 26 வருடங்களாக தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற போர் பேரழிவை ஏற்படுத்தியிருந்து ஆழமான காயங்களை விட்டுச் சென்றுள்ளது.

அப்படிப்பட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடம் ஒன்றுக்கு செல்வதற்கு அவர் தீர்மானித்துள்ளார். பரிசுத்த பாப்பரசரின் விஜயம் சில போக்குவரத்து பிரச்சினைகளை உள்ளடக்கியது. மடு கொழும்பிலிருந்து 260 கிலோமீற்றர் தொலைவிலுள்ளது.

எனினும் நல்லிணக்கத்தை மையப்படுத்திய இந்த விஜயத்தின் போது தமிழ் மக்களைப் 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரணில் தேர்தலில் போட்டியிட்டால் மகிந்தவை தோற்கடிப்பது கடினம்

## ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கும் முயற்சியை பலவீனப்படுத்தும் என் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி யாரை வேட்பாளராக நிறுத்துகின்றது என்பது பற்றி எமக்கு எவ்வித கவலையும் கிடையாது.

ரணில் போட்டியிடுகின்றாரா இல்லையா என்பதனை கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியே தீர்மானிக்க வேண்டும்.

எனினும், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு எதிரான பொது வேட்பாளர் என்ற சவாலை வெற்றி கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்படக் கூடும்.

ஜனாதிபதி தேர்தல் பற்றி பதற்றமடைய வேண்டியதில்லை. இன்னமும் ஜனாதிபதி தேர்தலுக்கு அறிவிப்பு விடுக்கப்படவில்லை.

2010-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக நியமித்தமை அரசியல் நோக்கத்துடனேயே தவிர, விளையாட்டாக அல்ல என சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## திருட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியிலுள்ள வீடொன்றின் ஜன்னல் கம்பிகளை வளைத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை உள்நுழைந்துள்ள திருடர்கள், அங்கிருந்த 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகை மற்றும் பணம் ஆகியவை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 8 பவுண் நகை (3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்) மற்றும் 80 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. (செ-11)

# அமைச்சுப் பதவிகள் வழங்குவதில் திருப்திப்படுத்தல்கள் இருக்கக் கூடாது

## விதுர விக்கிரமநாயக்க ஊடகங்களுக்கு கருத்து

சிலரை திருப்திப்படுத்தும் நோக்கில் அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளை வழங்குவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்கவின் மகனும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதியமைச்சர்கள் புதியதாக நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போன்ற சிறிய நாடொன்று பாரியளவிலான அமைச்சரவையை பராமரிப்பது சிக்கல் நிலைமையை உருவாக்கும்.

நாட்டில் தற்போதைக்கு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் என 106 பேர் அங்கம வகிக்கின்றனர்.

இவ்வளவு பெரிய ஓர் அமைச்சரவை நாட்டுக்கு சுமை என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும்.

எண்ணிக்கையில் குறைந்த அதிகாரங்களில் கூடிய அமைச்சரவை ஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டுக்கு; மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற முடியும்.

இந்த நாட்டுக்கு நன்மை ஏற்பட்டால் வீட்டுக்கு வீடு அமைச்சர்கள் உருவாகினாலும் நான் சந்தோசப்படுவேன், எனினும் நடைமுறையில் இதற்கு எவ்வித சாத்தியமும் கிடையாது.

30இற்கும் குறைந்த செயற்திறன் மிக்க அமைச்சர்களைக் கொண்டு சிறந்த முறையில் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அமைச்சர்களுக்கு மேலதிகமாக மாகாணசபை முதலமைச்சர்களும் அமைச்சர்களும் கடமையாற்றி வருகின்றனர்.

அதிகளவானவர்களை பதவியில் அமர்த்துவதன் மூலம் சுலபமாக செய்யக் கூடிய பணிகள் கூட கடினமாகிவிடும்.

கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை திருப்திபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதாக சிலர் முறைப்பாடு செய்வது தமது காதுகளுக்கும் எட்டியுள்ளது என விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (செ-11)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2014* *Date: 26.08.2014.*

## விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், **வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 27.08.2014ம் திகதி தொடக்கம் 17.09.2014ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல்** chairmanvsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 27.08.2014 முதல் 17.09.2014 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைக்கேள்விகள் 18.09.2014ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முனனர் மூலப்பிரதியை தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் வலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 18.09.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்
06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 04.09.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | சிலும்பலாட்டி வீதி புனரமைப்பு | 2.09 | 03 மாதங்கள் | M7/C8 | 20,000.00 |
| 02 | பழைய பொலிஸ் நிலைய வீதி புனரமைப்பு | 2.50 | 03 மாதங்கள் | M7/C8 | 25,000.00 |

தி.பிரகாஷ்
தவிசாளர்.

(சி-8296)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

# 30 மாதங்களில் நாட்டில் 3 தேர்தல்கள் நடத்தப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 30 மாதங்களில் நாட்டில் மூன்று தேசிய ரீதியான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட உள்ள அதிகாரிகள் பற்றிய தகவல்களை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அரச நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர், மாகாணசபை பிரதான செயலாளர்கள் மற்றும் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள மாகாணசபை, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தகவல்களை கோரியுள்ளார். (செ-11)


## உடனடி வேலைவாய்ப்பு

பிள்ளையார் இன் உல்லாச பிரயாணிகள் விடுதிக்கு (Tourism Hotel) அனுபவமுள்ள Bar முகாமையாளரும் (Bar Manager) Bar உதவியாளரும் (Barman) உடனடியாக தேவைப்படுகின்றனர். உங்களுடைய நற்சான்றிதழ் பத்திரங்களுடன் 01/09/2014 அன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் சமுகம் கொடுக்கவும். *(சி-8292)*

இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829, pillaiyar.in@gmail.com

137 ANTONY Jewells Designers

திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான ஜய வருடம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27.08.2014) புதன்கிழமை முற்பகல் 7 மணி முதல் 9 மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற



அன்ரனி ஜுவல்ஸ் டிசைனேர்ஸ்

எனும் தொழில் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க இறைவன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 137, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0776261650, 0212224392

தங்கள் நல்வரவை இனிதே நாடும்...
திரு. திருமதி A.M. அன்ரனி
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

காணாமற் போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலத்தை மாதம்பை, பனிரெந்தாவ வனாந்தரப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீட்டதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பை, பூக்குளம் பிரதேசத்தில் வசித்த சீ.பி.சத்துர வீரதுங்க (வயது 25) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது. பொறியியல் பாடநெறியை பயின்ற இவர், தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார்.

தமது மகன் கடந்த 31 ஆம் திகதியிலிருந்து காணாமற் போயுள்ளதாக சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் பெற்றோர் மாதம்பை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வனப் பாதுகாப்பு பணியாளர்கள் சிலர் பனிரெந்தாவ வனாந்தரப் பகுதியில் பயணப் பையொன்றையும் தேசிய அடையாள அட்டையொன்றையும் கண்டெடுத்தது டன், இது தொடர்பில் மாத ம்பை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

குறித்த அடையாள அட்டை காணாமற் போன இளைஞர் உடையது என பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரிய வந்ததுடன், இதனைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதலின் போது இவர் சடலமாக மீட்கப்பட்டார். அருகில் காணப்பட்ட உடைகளைக் கொண்டு அது காணாமற் போன தமது மகனுடையது என பெற்றோர் அடையாளம் காட்டியுள்ளனர்.

இந்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மாதம்பை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

## தொழில்நுட்ப அறிவு 50 வீதமாக உயர்வு

இலங்கை மக்களின் தகவல் தொழில்நுட்ப அறிவு 50 வீதமாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டில் இலங்கை மக்களின் தகவல் தொழில்நுட்ப ம்சார் அறிவு நான்கு வீதமாக காணப்பட்டதாக தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்க ளத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ)




முல்லைத்தீவு - விசுவமடு

## அருள்மிகு அதிசய விநாயகர் ஆலய

புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ

மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி

விழா விஞ்ஞாபனம்- 2014

| | | |
|---|---|---|
| கர்மாரம்பம் 27.08.2014 இன்று புதன்கிழமை காலை 6.00 மணிக்கு | எண்ணெய்க்காப்பு 28.08.2014 வியாழக்கிழமை காலை 7.00- 4.00 மணிவரை | கும்பாபிஷேகம் 29.08.2014 வெள்ளிக்கிழமை காலை 7.25-9.00 மணிவரை |

ஐங்கரன் அடியார்களே! சகல வளங்களும் பொலிந்து விளங்கும் இவ் இலங்காபுரியிலே சைவமும் தமிழும் பல்கல்வியும் செழித்தோங்கும் முல்லைத்தீவு-விசுவமடுப் பகுதியிலே கோவில் கொண்டு வீற்றிருந்து வேண்டுவோருக்கு வேண்டுவதை வாரி வழங்கும் வள்ளலாம் ஸ்ரீ அதிசய விநாயகப் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்கலகரமான ஜய வருடம் ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் (29.08.2014) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரமும் பூர்வ சதுர்த்தி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடி வரும் காலை 7.25 மணி முதல் 9.00 மணிவரை வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கைகூடியுள்ளதால் அடியவர்கள் அனைவரும் கும்பாபிஷேகத்திலும் அதன் முன் நடைபெறும் அனைத்துக் கிரியைகளிலும் கலந்து சிறப்பித்து எம் பெருமானின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பெற்று வாழ வேண்டி நிற்கின்றோம்.

28.08.2014 வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் (29.08.2014 ) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணிமுதல் புண்ணியாக வாசனம், யாக பூஜை, குண்ட பூஜை, கணபதி அஷ்டோத்திர விசேட ஹோமம், உபசார ஹோமம், மஹாபூர்ணாகுதி, வேத, தோத்திர, நாத, கீத, நிருத்தாஞ்சலிகள் சமர்ப்பணம், திருமுறை ஓதுதல், பலிகள், தானாதிகள் நடைபெற்று குறிப்பிட்ட சுப முகூர்த்த வேளைகளில் ஸ்தூபி அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தசதர்சன பூஜை , மஹா அபிஷேகம், எஜமான் அபிஷேகம், விசேட பூஜை, ஆசி உரைகள் என்பன நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

நயினை , சுவாமி நாத பரமேஸ்வரக் குருக்கள் , இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தானுமஹா தேவக் குருக்கள் ஆகியோரின் நல்லாசியுடன் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக பிரதம குரு

"ஆகம கிரியா பாவனர், சிவாச்சார்ய திலகம், வேதத் தமிழ் மறைச்சுடர்"

சிவஸ்ரீ நாராயண சண்முகநாதக் குருக்கள் (பிரதம குரு, ஸ்ரீவிநாயகர் தேவஸ்தானம், குருமன்காடு, வவுனியா)

விநாயகர் அடியார்களே குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தந்து எம்பெருமானின் திருவருள் கிடைக்க பால், தயிர், இளநீர், தேன், நெய், பழவகை, சமித்து வகை, பூக்கள், பூமாலைகள் ஆகியவற்றை வழங்கி அதிசய விநாயகரின் பாதாரம் பணிவோம்.

இங்ஙனம்:- ஆலய பரிபாலன-சபையினர்


## இராசி பலன்

27.08.2014

ஆவணி 11, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

துதியை முன்னிரவு 11.40 மணிவரை

பூரம் முற்பகல் 9.32 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சுபநேரம் 4.35- 6.05 மணிவரை

வளவன்

**மேடம்** — மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** — கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபடவேண்டிய நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்,

**மிதுனம்** — பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** — குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை, விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,

**சிம்மம்** — புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கற்பனை மிகுதியான நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** — விரும்பிய உணவுப்பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கேயென்று நினைக்கவேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வருகையுண்டு.

**விருச்சிகம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், குடும்ப ஒற்றுமை கூடும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்** — தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், வழிபாட்டால் வளம் காணவேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்** — தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், நிதானத்துடன் நடந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**மீனம்** — நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், தெய்வீக சிற தனை மேலோங்கும், சொந்த ப தங்களின் வருகையுண்டு, சுப காரி யப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களுடன் கைதானவருக்கு மூன்று மாதகால சாதாரண சிறை

## மட்டு. நீதிமன்றம் தீர்ப்பு

(மட்டக்களப்பு)

பயங்கரமான அபாயத்தை விளைவிக்கக் கூடிய துப்பாக்கிகள், வெடிபொருட்கள், ரவைகள் போன்றவற்றை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டு 5 வருடங்கள் விளக்கமறியலில் இருந்து வந்த நபர் தன்மீது சுமத்தப்பட்ட இரு குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொண்டதால் இரு குற்றச்சாட்டுக்கும் தலா மூன்று மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டது.

அத்துடன் சிறைத்தண்டனை முடிவடைந்ததும் ஒரு வருடம் புனர்வாழ்வுக்குச் செல்ல வேண்டுமெனவும் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த இந்த வழக்கில் மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் மேற்படி தீர்ப்பை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கினார்.

மட்டக்களப்பு நாவற்குடா, ஈச்சத்தீவைச் சேர்ந்த நல்லரத்தினம் மகேந்திரராஜா எனும சந்தேகநபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு 2009 நடுப் பகுதியில் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவசரகால ஒழுங்குவிதிகளின் 34ஆம் கட்டளைப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்தார் என சட்டமா அதிபரால் இவர் மீது மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதன்படி பயங்கரமான துப்பாக்கிகளை அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்ததார் எனவும், துப்பாக்கி ரவைகள், வெடிமருந்துகள், யுத்ததளபாடங்கள் போன்றவற்றை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்தார் எனவும் எதிரியான நல்லரத்தினம் மகேந்திரராஜா மீது இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரி தம்மீதான இரு குற்றச்சாட்டுக்களையும் சுயமாக விரும்பி ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை, எதிரி கடந்து ஐந்துவருட காலமாக விளக்கமறியலில் இருந்து வருவதை அவர் தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டியிருந்தார்.

அவரைப் புனர்வாழ்வுக்குட்படுத்தும் வண்ணம் குறைந்த பட்ச தண்டனை வழங்குமாறும் விண்ணப்பித்திருந்தார். திருமணமாகி ஒரு பிள்ளையின் தந்தையான எதிரி இடது கண் பார்வையை இழந்தவரென்பதும் முன் குற்றம் ஏதும் இழைக்காதவரென்பதும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது.

இவற்றைப் பரிசீலித்து கவனத்தில் கொண்ட நீதிபதி, குற்றங்களை எதிரி ஏற்றுக் கொண்ட நிலையில் இரு குற்றங்களுக்கும் தலா மூன்று மாத கால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் ஏககாலத்தில் குறித்த சாதாரண சிறைத்தண்டனையை அனுபவித்து முடிந்த அடுத்த நாள் முதல் ஒரு வருடம் வெலிகந்த புனர வாழ்வு முகாமில் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (இ)

# தமிழீழமா? அரசியல் தீர்வா? தமிழர்களே தீர்மானிக்கட்டும்

## பிரித்தானிய தமிழர் பேரவை

தனியான தமிழ் நிலத்தை காட்டிலும் அரசியல் தீர்வு மிகவும் நம்பிக்கையானது என்று பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அமைப்பின்மனிதவுரிமைகள்இணைப்பாளர் கானா நிர்மலன் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளதாக இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே தமக்கு எந்த தீர்வு தேவை என்று தீர்மானிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்தித்த இந்திய பிரதமர் மோடியிடம் அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்குமாறு கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்தநிலையில் தமது அமை ப்பும் இலங்கை தமிழர் பிரச்சி னையில் இந்தியாவின் பாரிய பங்கை கோருகிறது என்று நிர்மலன் குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவடைந்ததாக கூறப்பட்ட பின்னர் தமிழ் தேசியக் கூடடமைப்பு அரசியல் தீர்வு ஒன்றை வலியுறுத்தி வருகிறது.

எனினும் தமிழகத்தில் உள்ள சில பிரிவினரும் புலம்பெயர்ந்த தமிழர்களில் உள்ள சில பிரிவினரும் தனியான ஈழத்தை கோருகின்றனர்.

இந்தநிலையில் இந்தியா, நான்கு பிரிவினரின் சமாதான முனைப்பை கருத்திற் கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழ்ந்து கொண் டிருக்கும் மக்கள், இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகள், பாதிக்கப்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களும் தமிழ் நாடு என்ற நான்கு பிரிவினரின் கருத்துக்களை இந்தியா கருத்திற்கொ ள்ள வேண்டும் என்று நிர்மலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்கனவே இலங் கையின் போர்க் குற்றங்கள் தொடர் பிலான அரசாங்கத்துக்கு எதிரான ஆவணங்களை சேகரித்துள்ளதாக இந்திய இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (இ)

# புகலிடக் கோரிக்கையாளர்களை படகில் அனுப்ப முயன்றவர்கள் கைது

இலங்கையர்களை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பும் நடவடிக்கை தொடர்பில் இந்திய பாதுகாப்பு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆட்கடத்தல் தொடர்பில் இலங்கையர்கள உட்பட 04 சந்தேகநபர்கள் ஆந்திராவில் கைது செய்யப்பட்டுள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

வர்த்தக கப்பலில் இலங்கையர்கள் 06 பேரை அவுஸ்திரேலியாவிற்கு அனுப்புவதாக ஆட்கடத்தல்காரர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதற்கமைய, இலங்கையர்கள் தலா 05 இலட்சம் இந்திய ரூபாய்களை ஆட்கடத்தற்காரர்களுக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு பயணிப்பதற்காக இந்தியாவிற்கு விமானம் மூலம் வருகைதந்த 06 இலங்கையர்கள் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

படகு மூலம் 200 கடல்மைல் தூரத்திற்கு சென்று, அங்கிருந்து வ்ர்த்தக கப்பல் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு பயணிக்க முடியுமென ஆட்கடத்தல்காரர்கள் இலங்கையர்களுக்கு உறுதியளித்திருந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# தேசிய அடையாள அட்டை 4 ஆயிரம் பேரிடம் இல்லை

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு, பதுளை மாவட்டத்தில் இடம்பெறும் நடமாடும் சேவையில், இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 40 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லையென திணைக்களத்தின் ஆணையாளர் சரத்குமார தெரிவித்தார்.

விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகளை இந்த வாரத்திற்குள் தயார் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் 10 இடங்களில் அண்மையில் இந்த நடமாடும் சேவை முன் எடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இலவசமாக வழங்கப்படும இந்த சேவையின் ஊடாக உச்ச பலனை பெற்றுக்கொள்ளுமாறு கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன கூறினார்.

வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையை பாதுகாக்கும் வகையில், கபே அமைப்பு, தேர்தல்கள் செயலகத்துடன் இணைந்து இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கிழங்கு, வெங்காய வரி அதிகரிப்பு

(கொழும்பு)

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மீதான விசேட வர்த்தக தீர்வை நேற்றுத் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளுர் விவசாயிகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொடுக்கும் வகையில், இறக்குமதித் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கான விசேட வர்த்தக தீர்வை 25 ரூபாயில் இருந்து 45 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்திற்கான தீர்வையும் 30 ரூபாயில் இருந்து 35 ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது.


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

*The chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the constr uction and renovation works in the schedule below.*

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Vali dity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Orthopaedic Clinic & Renovation of Toilet in Ward No: 06 | 500.00 | 23,000.00 | 91 | 1.12 | C8 |
| Renovation of Neurosurgical Ward, Aluminium Partition in the Operation Theatre and Aluminium Partition of Rooms in 1st & 2nd Floor JICA Buildings | 500.00 | 25,000.00 | 91 | 1.24 | C8 |

1.Biding will be conducted through National Bidding Procedure

2.To be eligible for conduct award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4.A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 28.08.2014 until at 4.00 pm on 10.09.2014 during office hours. The payment shall be made to the shroff, Teaching Hospital, Jaffna.

5.Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 11.09.2014, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**27.08.2014.**

(C-8295)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கைதியாக நடத்தப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள்

## ஆஸி. அரசு மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலகின் மிகவும் மோசமான சிறைச்சாலைகளில் ஒன்றாக கருதப்படும் குவந்தனாமோ சிறைச்சாலையின் கைதிகளுக்கு நிகராக அவுஸ்திரேலிய புகலிடக் கோரிக்கையாளர்கள் நடத்தப்பட்டு வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையர்கள் உள்ளிட்ட பல நாடுகளின் புகலிடக் கோரி க்கையாளர்கள் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினரின் பரிந்துரைகளுக்கு அமைய நான்கு புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் காலவரையறையின்றி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய புகலிடக் கோரிக்கையாளர்களை நடத்தும் விதம் குறித்து ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில், இந்த புதிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மெல்பேர்ன் மற்றும் சிட்னி ஆகிய நகரங்களில் 44 புகலிடக் கோரிக்கையாளர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்களுக்கும் சுமத்தாது கடந்த ஐந்து ஆண்டுகளாக தடுத்து வைக்க ப்பட்டுள்ளனர். இவர்கள் தடுத்து வைக்கப்பட்டமைக்கான காரணங்களை அறிந்துகொள்ள இது வரையில் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அவுஸ்திரேலிய அதிகாரிகளின நடவடிக்கைகளினால் புகலிடக் கோரிக்கையாளர்கள் பாரியளவில் மன உளைச்சல்களுக்கு உள்ளா கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படும் நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் சர்வதேச பிரகடன ங்களை மீறும் வகையில் அமைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளானது மனிதாபிமானற்ற வகையில் அமைந்துள்ளதாக சிட்னி பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் பென்சாவுல் தெரிவித்துள்ளார்.

எவ்வித குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாது புகலிடக் கோரிக்கையாளர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்படுவது மனிதாபிமானமற்ற குரூர செயலாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலவரையறையின்றி புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும், இவ்வாறான முகாம்கள் குவந்த னாமோ சிறைக்கு நிகரானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

44 புகலிடக் கோரிக்கையா ளர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக கால வரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் ஒப்புக் கொண்டுள்ளார்.

புகலிடக்கோரிக்கையாளர்களின் உளவியல் சுகாதாரத்தை மேம்ப டுத்த தகுதியான மருத்துவர்களின் ஊடாக சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்து ள்ளது. (இ)

# பேஸ்புக் மீதான வழக்குக்கு 60000 பயனாளர்கள் ஆதரவு

(கொழும்பு)

சமூக வலைத்தளமான பேஸ்புக் மீது அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சட்டக் கல்வி மாணவர் மேக்ஸ் செரிம்ஸ் வழக்கு தொடர்ந்துள்ளார்.

பேஸ்புக்கை பயன்படுத்துபவர்களின் தனிப்பட்ட விடயங்களை அந்நிறுவனம் வேவு பார்ப்பதாக அவர் முக்கியமாக குற்றம் சாட்டியுள்ளார். அவரது இந்த வழக்குக்கு பேஸ்புக்கை பயன்படுத்தும் 60 ஆயிரம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பேஸ்புக்கை பயன்படுத்துபவர்களின் தனிப்பட்ட விடயங்களை வேவுபார்த்ததற்காக அந்நிறுவ னம், அதனை பயன்படுத்தும் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.40 ஆயிரம் நட்ட ஈடு தரவேண்டும் என்று மேக்ஸ் ஐரோப்பிய நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு தொடர்ந்துள்ளார். பேஸ்புக்கை சுமார் 132 கோடிக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர். அந் நிறுவனத்தின் மொத்த மதிப்பு சுமார் 12 இலட்சம் கோடியாகும். (இ)

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. பொறியியல்பீட உணவகம்- அறிவியல்நகர், கிளிநொச்சி
2. விவசாயபீட உணவகம்- அறிவியல்நகர், கிளிநொச்சி

மேற்படி உணவகங்களை நடத்துவதற்குரிய பொறியிடப்பட்ட கேள்விகள் 2014.09.12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள கணக்கு இலக்கம் 162-1001-60000-880 செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப்படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல்நகர் பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (சி-8294) **26.08.2014**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 04 1931 — இறப்பு 30 08 2011



### அமரர் திரு. நடராஜா பத்மநாதன்

திதி: துதியை

எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் விண்ணுலகில் கால்பதித்து மூவாண்டு சென்ற போதும்
எங்கள் இதயமெனும் கோவிலில் நிதமும் வாழ்கிறீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில் நாம் பயணித்து
உங்கள் கனவுகளை நனவாக்குவோம்
நீங்கள் எம்முடன் வாழ்ந்த நாட்களை தினமும் நினைக்கின்றோம்
நீங்கள் எம்முடன் இருப்பதாகவே உணர்கின்றோம்
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காதவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

103/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7495)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA / உதவிக் கணக்காளர்<br>தொ.இ: B/1805 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/2666 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 20 ¼<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/1806 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 37 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: G/2668 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 44<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, GAQ / வியாபாரம்<br>தொ.இ: B/1807 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம் 1<br>கி.பா: 74 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/2671 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 09 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: 9ஆம் வகுப்பு / வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், கிறிஸ்தவர்களும் பார்க்கலாம்.<br>தொ.இ: B/1811 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 37 ½ செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc / நிரந்தர வேலை (நியூசிலாந்து)<br>தொ.இ: G/2672 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு அடிப்படையில் ஆசிரியர்களை விரிவுரைப்பணிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

மத்திய மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வெற்றிடமாகவுள்ள விரிவுரைப் பணிகளுக்கு வடக்கு மாகாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விணணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் விடயங்களில் முக்கிய கவனத்தினைக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இந்நியமனம் ஆசிரிய சேவையில் இருந்தவாறே கலாசாலையில் விரிவுரைப்பணியில் ஈடுபடுகின்ற வகையில் அமையும் தற்காலிக இணைப்பு ஆகும்.

விண்ணப்பங்களில் பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் 'விடுவிக்க முடியும்' எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்களை 12.09.2014 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடிய வகையில் அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

கீழ்வரும் பாடத்துறைகளில் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை வகுப்பு III சேவைத் தெரிவுக்காக 23.11.2012 ஆம் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமைக்கு அமைவானவர்கள் அல்லது அதற்கு அண்மித்த தகைமை கொண்டவர்கள் முனனுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

இருப்பினும் விண்ணப்பதாரிகளின் கற்பித்தல் சேவைக்காலத்தை உச்ச அடிப்படையாகக்கொண்டு வயதெல்லை வரையறைசெய்யப்படமாட்டாது.

வர்த்தமானி அறிவித்தல்,விபரங்கள் தேவைப்படுவோர் இக் கலாசாலையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

வெற்றிடமாகவுள்ள பாடங்களும் தேவைப்படும் ஆளணியும்.

தொழில்சார் கல்வி (ஆங்கில மொழி மூலம்) 01, கிறிஸ்தவ சமயம 01, கணிதம் 02, பொது ஆங்கிலம் 01, சமூக விஞ்ஞானம் (வரலாறு குடியியல், புவியியல்) 02, தமிழ் 01, இரண்டாம் மொழி சிங்களம் 02, அழகியல் - நாடகமும் அரங்கியலும் 01, ஆரம்பக் கல்வி (சுற்றாடல்சார் செயற்பாடுகள்) 01.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை கலாசாலையிலும் வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட வலயக் கல்விப் பணிமனைகளிலும் பார்வையிடலாம்.

அந்த மாதிரிக்கேற்ப விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும் என கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## குசேலர் இசைநாடகம் இன்று நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தினை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்தி வருகின்ற தெய்வீக இசை அரங்கின் இறுதி நாளாகிய இன்று புதன்கிழமை) மாலை 06.45 மணிக்கு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற **குசேலர** இசை நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி ,வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 160 | 150 |
| தக்காளி | 40 | 80 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 60 |
| கோவா | 60 | 60 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 90 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 70 | 120 | 90 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 130 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 20 | 30 | 30 | 60 |
| போஞ்சி | 120 | 140 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 130 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | 90 | — |

# பிடெல் கஸ்ட்ரோவின் 8 வயதேயான இரசிகன்

அமெரிக்க ஏகாதிபத்திய அடக்குமுறையை எதிர்த்துப் போராடி, புரட்சியின் மூலம் கியூபா நாட்டின் ஆட்சியை கைப்பற்றி, தொடர்ந்து 49 ஆண்டுகள் அந்நாட்டின் அசைக்க முடியாத ஜனாதிபதியாக ஆட்சி செலுத்தியவர் பிடெல் கஸ்ட்ரோ. அவருக்கு தற்போது, 88 வயதாகின்றது. அரசியல்பணிகளில்இருந்து விலகி தலைநகர் ஹவானாவில் உள்ள இல்லத்தில் பூரண ஓய்விலுள்ளார்.

அவரை மானசீக தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு கிடைக்காத தொரு அரிய வாய்ப்பு, அந்நாட்டைச் சேர்ந்த 8 வயது சிறுவனுக்கு கிடைத்துள்ளது.

சிறுவயது முதல் தங்கள் நாட்டின் வீரத்திருமகனைப் பற்றிய வரலாற்றை படித்தறிந்த மர்லான் மெண்டேஸ் என்ற அந்தச் சிறுவன், பிடெல் காஸ்ட்ரோவைப் போன்றே பச்சை நிற உடைகள் அணிந்து, அவரது சிறப்பு அடையாளமான தொடை வரை உயர்ந்த காலணிகள் மற்றும் பாதி நெற்றியை மறைக்கும் துணித் தொப்பியுடன் கியூபாவின் ஊடகங்களில் காட்சியளித்துள்ளான்.

அவனைப் பேட்டி எடுத்த நிருபர்கள், பொம்மை படங்களை தனது படுக்கையறைக்குள் ஒட்டிவைத்து ரசிக்கும் இந்த வயதில், ஒரு புரட்சியாளரின் விதவிதமான புகைப்படங்களை ஒட்டியிருக்கும் அவனைப் பற்றிய ஒரு செய்தி தொகுப்பினை சமீபத்தில் ஒளிபரப்பினர்.


இதைக் கண்ட பிடெல் காஸ்ட்ரோவின் குடும்பத்தார், மானசீக தலைவரை நேரில் சந்திக்க வரும்படி சிறுவனுக்கு அழைப்பு அனுப்ப, அந்த மாபெரும் மக்கள் தலைவரை சந்தித்துப் பேசி, அவரது நல்வாழ்த்துகளை பெறும் அரிய வாய்ப்பு மர்லான் மெண்டேசுக்கு கிடைத்தது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 117

டொறின் மன்மதநாயகம்




கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




சச்சி சங்கீத்





ஜவன் லனு




ஜது ஜது




ஹார்ட் பெயின்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நியமித்த நிபுணர்களின் குழுவானது அரசை அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

முன்னைய இளைஞர்களும் அரசியல் அமைப்பும் வேறுவேறாக இயங்கியமையால் தான் எமது சமூகத்தால் வெற்றி பெற முடிய வில்லை. தற்போது எமது இரு அமைப்புகளும் சேர்ந்து நின்று இந்த அரசிற்கு பாரிய அழுத்தத் தினைக் கொடுக்க வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி பொதுக்கூட்டம் மாவட்ட தலை மைக் காரியாலயத்தில் இளைஞர் அணியின் தலைவர் செயோன் தலைமையில் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இளைஞர்கள் இல்லாமல் அர சியல் செய்வது என்பது இயலாத காரியம். எமது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட கால த்தில் இருந்து அதற்கு பின்னால் இருந்து உழைத்தவர்கள் இளை ஞர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. எமது கட்சியின் ஆரம்பம் பின்னர் தமிழர் விடுதலைக் கூட் டணி பின் தமிழ்த் தேசியக்கூட் டமைப்பு போன்ற பரிணாம வளர் ச்சியின் அடிப்படை அனைவரும் அறிந்ததே. அந்த நாட்களில் தமி ழரசுக்கட்சியையோ, தமிழர் விடுத லைக்கூட்டணியையோ வழி நடத் திச் சென்றவர்கள் இளைஞர்களே.

அரசியல்நடவடிக்கைகள் இந்த இலங்கை அரசாங்கத்தின் அர சியல் ஓட்டத்திற்கு ஒப்பானதாக இல்லை என்று அன்றைய இளை ஞர்கள் தீர்மானித்ததன் காரண மாகத்தான் 1980 களுக்குப் பின் பாரிய போராட்டங்கள் இடம்பெற் றன. தற்போது அவை மௌனிக் கப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றை



மட்டும் உணர வேண்டும் இளை ஞர்கள் இல்லாமல் அரசியல் என் பது ஒரு வெற்றுப்பை ஏனெனில் இளைஞர்களின் மூச்சும் வீச்சும் இளைஞர்களுக்கு பக்கபலமாக இருக்கின்ற ஒன்று.

இந்த அரசாங்கம் அரசியல் கட்சிகளுக்குப் பயப்படாமல் இருந் தாலும் இளைஞர் அணிகளுக்கு பயப்பட்டே ஆக வேண்டும். ஏனெ னில் அதில் அனுபவப்பட்டவர்கள் அரசாங்கத்தினர் என்பது அனை வரும் அறிந்ததே.

எனவே தான் அரசாங்கத்திற்கு ஒரு பூரண அழுத்தத் தைக் கொடுக் கும் முகமாக வடக்கு கிழக்கில் இருக்கும் இளைஞர்களை ஒன் றிணைத்து அரசியல் அமைப்புடன் சேர்ந்து அரசியல் அமைப்பின் மேற்பார்வையின் கீழ் உருவாக் கியுள்ளோம். ஏனெனில் நாம் தனித்து நின்று அகிம்சைப் போரா ட்டத்தினாலும் பிரிந்து ஆயுதப் போராட்டத்தினாலும் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது.

சர்வதேச விசாரணை தற்போது ஜெனீவாவில் இடம்பெற்றுக் கொண் டிருக்கின்ற போது அதனைக்குழப் புவதற்கு சர்வதேச நிபுணர் குழு வென்ற ஒன்றை இந்த அரசாங்கம் நியமித்திருக்கின்றது. இது ஒரு வேளை இலங்கை அரசாங்கத் தின் அழிவுப்பாதைக்கு வழிவ குக்கும் அந்த அளவிற்கு இன்றைய நிலை போய்க்கொண்டிருக்கும் போது நாம் ஒற்றுமையுடன் இரு ந்து எமது அபிலாசைகளை நிறை வேற்ற வேண்டும்.

எமது பணி தொடர்வதற்கு இளை ஞர் அமைப்புகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய கடமை இருக் கின்றது. அவற்றை மேற்கொள வதற்கு பல பிரச்சினைகள் தோன் றலாம். ஏனெனில் சட்டங்கள் போடும் இந்த அரசாங்கம் அதனை மீறும் செயற்பாடுகளையும் அண் மையில் மேற்கொண்டு வருகின் றது. இந்த நிலையிலிருந்து எமது சமூகத்தினை நாம் கட்டியெழுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளரி

Botanical Name-Cucumis Satrius

Family- Cucurbitaceac

Engl-Cucumber

Sinh-Pipingna

**அறிமுகம்**

உரோமங்களையுடையதும் சொரசொரப்புடையதுமான ஒரு கொடித்தாவரமாகும். தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்புக்கொண் டவை. 11-16 செ.மீ. நீளமும் 14 செ.மீ அகலமும் உடைய கோளவடிவ, இருதய வடிவ கூரிய முனைகளை யுடைய இலைகளை கொண்டது.

இலையின் இருபக்கங்களும் கணைகளையுடையது. இலைக் காம்பு 5-8 செ.மீ நீளமுடையது. பூக்கள் ஒருபாலானவை. அவை பிரகாசமான மஞ்சள் நிறம் கொண் டவை. நீள்வட்ட வடிவான பெரிய பழங்களைத்தரும். விதைகள் தட்டை யான வெள்ளை நிறமானவை. இவ்விதைகள் கிட்டத்தட்ட 6 மி.மீ நீளமானவை.

**இனவிருத்தியும் பரம்பலும்**

யாழ்.மாவட்டத்தில் தோட்டப் பயிராக பயிரிடப்படுகின்றது. விதை கள் மூலம் இனவிருத்தி செய்ய லாம். தை முதல் சித்திரை காலப் பகுதியிலும் ஆனிமுதல் புரட்டாதி காலப்பகுதியிலும் இனவிருத்தி செய்யப்படுகின்றது.

**வெள்ளரிக்காயின் உண்ணும் பகுதி**

**100 கிராமிலுள்ள சத்துக்கள்**

புரதம் 0.4கி

கொழுப்பு-0.1 கி

காபோவைதரேற்று-2.5கி

நார்ப்பொருட்கள்-0.4 கி

கல்சியம் 10மி.கி

பொஸ்பரஸ்-25 மி.கி

இரும்புச்சத்து 1.5 மி.கி.

தயமின் 0.03மி.கி

நியாசின் 0.2 மி.கி

சோடியம் 7மி.கி

பொட்டாசியம் 50 மி.கி

தாம்பிரம் (செம்பு) 0.1 மி.கி

நைட்ரஜன் 0.06கி

**மருத்துவப் பயன்கள்**

வெள்ளரிப்பிஞ்சினை தினமும் சாப்பிட்டு வர தாகத்தை குறைக்கும். குளிர்ச்சியைத் தரும். உணவை எளிதில் ஜீரணம் செய்யும்.

வெள்ளரிப்பிஞ்சைசிறுசிறுதுண்டு களாக நறுக்கி தயிர்ப்பச்சடியில் சேர்த்தோ மோரில் போட்டு தாளி த்தோ அருந்தலாம். அல்லது சிறு சிறு துண்டுகளுடன் உப்பு, மிள காய்ப் பொடி சேர்த்து உண்ணலாம். இதனால் சிறுநீர் எரிச்சல் அப்பகுதி யில் ஏற்படும் அரிப்பு தீரும்.

வெள்ளரிக்காயை மிக்சியில்



அடித்து மென்பானமாக அருந்தி வர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும். மலச்சிக்கலை நீக் கும். இதன் சாறு வயிற்றுப்புண் ஆற்ற வல்லது. இதில் 96.3வீத நீர்ச்சத்து உள்ளதால்வயிற்றெரிச்சலை உடனடி யாக குணமாக்க வல்லது.

வெள்ளரிக்காயை அறுத்து அதை தினமும் முகத்தின் மீது பூசி வந்தால் முகத்தோல் வரட்சி நீங்கும். முகப் பருக்கள் வராமல் தடுக்கும். தேமல் நீங்கும். முகம் பளபளப்பாகும்.

வெள்ளரிப்பிஞ்சுச் சாறு, பசளிக் கீரைச்சாறு, கரட்சாறு மூன்றையும் சமஅளவு கலந்து சீனி சேர்த்து கரைத்து (மொத்தமாக 300 மிலீ சாற்றுக்கு 150 கி சீனி விகிதம்) அடுப் பில் வைத்து பானமாக தயாரித்து காலை, மாலை 5 தேக்கரண்டி அளவு சாப்பிட்டால் முடிவளரும், முடி உதிரலும் நிற்கும்.

தோலில் அடிக்கடி அரிப்பு ஏற் பட்டு கொப்புளங்கள் உண்டாக் கும். நகத்தால் கீறி விடுவதால் புண் ணாகி விடும். இவற்றை நிரந்தர மாக குணமாக்க வெள்ளரிக்காய் சாறு, அறுகம்புல் சாறு, கரட்சாறு மூன் றையும்சமஅளவுகலந்துதினமும் ஒருவேளை குடித்துவரலாம்.

வாந்தி, பேதி முதலியன ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறைந்து உடலு க்கு சக்தி தேவைப்படும் போது வெள் ளரிக்காய் சாறும் இளநீரும் சம அளவு கலந்துஒருமணிநேரத்திற்குஒருமுறை 30 மிலீ-60மிலீவரை அருந்தலாம்.

நன்றாக பழுத்த வெள்ளரிப்பழத்தி லிருக்கும் சதைப்பகுதியை விதை களை நீக்கி பிரித்தெடுத்து அதன் சாற்றை உப்பு அல்லது சீனியும் மோரும் கலந்து அருந்த தாகம் தணி ந்து புத்துணர்ச்சி உண்டாகும். சிறுநீர் முறையானஅளவுடன்வெளியேறும்.

வெள்ளரி விதைகளை பிரித் தெடுத்து வெயிலில் நன்கு உலர்த்த வேண்டும். உலர்த்தப்பட்ட விதை களின் மேற்தோலை எளிதாக பிரித் தெடுத்து உள்ளிருக்கும் பருப்பை தாம்பூலத்தில் (வெற்றிலை, பாக்கு கலவை) சேர்த்து உண்டால் குளிர்ச் சியை தரும். இரத்தத்தை சுத்தப்ப டுத்தும் தசை வெடிப்பை நீக்கும். சமிபாட்டை தூண்டும்.

வாதுமைப்பருப்பு 10 கிராம், வெள் ளரிப்பருப்பு10கிராம்ஆகியவற்றை காய் ச்சிய சூடான பசும்பாலில் 250 மில் லியில் போட்டு ஊறவைத்து தேன் சேர்த்து இளஞ்சூடான பதத்தில் 30 மில்லிஅளவுகாலை, மாலைஅருந்த உடலுக்கு சக்தியைக் கொடுக்கும்.

வெள்ளரி இலையை சீரகத்து டன் கலந்து வறுத்து பொடி செய்து 100 மிகிராம் உட்கொள்ள தொண்டை தாபிதம் நீங்கும்.

பேரீச்சம்பழத்தையும் வெள் ளரிப்பழத்தையும் சேர்த்து கலந்து ண்ணல் மருத்துவ குணமிக்க கலவையாகும். பேரீச்சம்பழம் உடலில் உஷ்ணத்தை உண்டாக்கும். வெள் ளரிக்காய்/ பழம் குளிர்மையை தரும். இரண்டையும் சேர்த்துண்ண அனை வருக்கும் ஏற்ற உணவாக அமை யும். மருந்தாகவும் மாறிவிடுகிறது.

35 கிராம் விதைகளை நன்கு அரைத்து 175 மில்லிலீற்றர் நீரில் கரைத்து வடிகட்டி 30 மில்லி அளவு தினமும் 3 வேளை குடிக்க சிறுநீரகக் கற்கள் கரைந்து சிறுநீர் நன்கு வெளியேறும். இவ்வாறு தொடர்ந்து 40 நாட்கள் பயன்படுத்தி வரலாம்.

தோல்நீக்கிய பாதாம்பருப்பு ஒரு தேக்கரண்டி, ஒரு தேக்கரண்டி வெள் ளரி விதை ஆகியவற்றை காய்ச்சிய பாலில் 100 மில்லியில் கலந்து 30 நாட்கள் அருந்திவர தாதுக்கள் கெட்டி யாகி உடல் பலம் பெறும்.

பிஞ்சு, காய் இவற்றிலுள்ள பொது வான மருத்துவப்பயன்கள்வெள்ளரிப் பிஞ்சுச்சாற்றை முற்றினாலும் கடித் துத் தின்ன சுவையாக இருக்கும். தாகத்தைஅடக்கும். குளிர்ச்சியைதரும். உணவை எளிதில் ஜீரணம் செய்யும். பசியைத் தூண்டும்.

வெள்ளரிபிஞ்சு சிறுசிறுதுண்டுகளு டன் உப்பு, மிளகாய்ப்பொடி சேர்த்து உண்ணலாம்.

வெள்ளரிப்பிஞ்சு, மூத்திரதாரை தினவு,நீர்ச்சுருக்கு குணமாக உதவும்.

வெள்ளரிப்பழத்திலிருக்கும் தசைப்பகுதியை விதையை நீக்கி நசுக்கிச் சாறெடுத்து அதனுடன் உப்பு அல்லது சர்க்கரையும் மோரும் கலந்துண்ண தாகம் தணிந்து புத்து ணர்ச்சி உண்டாகும்.

**உடல் பலவீனத்திற்கு**

வாதுமைப்பருப்பு, வெள்ளரி விதைப்பருப்புகளை சூடான பாலில் போட்டு ஊறவைத்து தேன் சேர்த்து இளஞ்சூடான பதத்தில் அருந்தி உண்ணவேண்டும்.

வெள்ளரி இலையை சீரகத்து டன் கலந்து வறுத்து பொடிசெய்து, சிட்டிகைஉட்கொள்ளதொண்டையில் உண்டாகும் நோய்கள் போகும். சர்க் கரை சேர்த்து உண்ண சிறுநீ ரைப் பெருக்கும்.

**வெள்ளரிப் பழசர்பத் தேவையான பொருட்கள்**

வெள்ளரிப்பழச்சாறு, அதற்கு அளவான சர்க்கரை, ஒரு கிளாஸ் சர்பத்துக்குதேவையானஎலுமிச்சைச் சாறு, ஐஸ்கட்டி ஒரு துண்டு, தேவை யென்றால் போட்டுக் கொள்ளலாம். இல்லையென்றால்தேவையில்லை.

**செய்முறை**

வெள்ளரிப்பழங்களை தண்ணீ ரில் கழுவி ஒரு வாய் அகன்ற பாத் திரத்தில் போட்டு கையைக் கழுவிக் கொண்டு பழங்களை நன்றாகப் பிசைந்து பிசைந்த சாற்றை இறக் கிக்கொண்டு விதைகளை எல் லாம் எடுத்து விட்டு மாச்சல்லடை யில் வடிகட்டி அந்தச்சாறு எவ்வ ளவு இருக்கிறதோ அந்த அளவு சர்க்கரையை சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி பாகுப்பதம் வந் ததும் இறக்கி ஒரு சுத்தமான சீசாவில் ஊற்றிவைத்துக் கொள்ள வும். இந்த சர்பத்தில் மூன்று தேக்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கரண்டி அளவு எடுத்து ஒரு டம்ள ரில்விட்டுஅதேயளவுதண்ணீர்ஊற்றி பாதாம் பிசினை ஊறவைத்து சர்பத்தில் 5, 6 துண்டுகள் போட்டு ஒருமூடி எலுமிச்சைச்சாறு பிழிந்து ஊற்றி, தேவையானால் ஒரு ஐஸ்கட்டி போட்டு பருகவும். இவ்வாறு தொடர் ந்து 5 நாட்கள் கொடுக்கவேண் டும்.

இதன்பயன்உடல்உஷ்ணத்தைதணி த்து பித்தநோய்களை நீக்கி உடலு க்கு பாதுகாப்பை கொடுக்கக் கூடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்

903




அன்டார்ட்டிக்காவில் பறவைகள், நீரில் வாழ்வன. நிலத்தில் வாழ்வன என இருந்தாலும், ஊர்வன மற்றும் விலங்குகள் கிடையாது!

ஷ்ரோபெரி பழத்தை விட எலுமிச்சையில் சர்க்கரை அதிகம்.





## சுட்டி அட அப்படியா?



ஈ தன் இறக்கைகளை ஒரு நிமிடத்துக்கு 20,000 தடவைகள் அடித்துக் கொள்ளும்.



உலகிலேயே மிகப்பெரிய தீவு க்ரீன்லாந்து. இதன் பரப்பளவு, 2,166,086 சதுர கிலோ மீற்றர்கள்.

08.2014 27

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1689-இரசியாவுக்கும் சீனாவின் சிங் பேரரசுக்கும் இடையில் நெர்ச்சின்ஸ்க் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1776 - பிரித்தானியப் படைகள் லோங் தீவில் ஜோர்ஜ் வாஷிங்டன் தலைமையிலான அமெரிக்கப் படைகளைத் தோற்கடித்தன.
- 1813 - ஆஸ்திரியா, ரஷ்யா, மற்றும் புருசியா படைகளை நெப்போலியன் "டிறெஸ்டென்" என்ற இடத்தில் தோறகடித்தான்.
- 1816 - அல்ஜியேர்ஸ் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.
- 1828 - ரஷ்யப் படை "அக்கால்சிக்" என்ற இடத்தில் துருக்கியப் படைகளை வென்றது.
- 1828 - பிரேசிலுக்கும் ஆர்ஜெண்டீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற சமரசப் பேச்சுக்களில் உருகுவே தனிநாடாக அறிவிக்கப்பட்டது.
- 1859 - பென்சில்வேனியாவின் "டிட்டுஸ்வில்" என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே உலகில் வெற்றிகரமாகத் தோண்டப்பட்ட முதலாவது எண்ணெய்க் கிணறு ஆகும்.
- 1896 - ஆங்கிலோ-சன்சிபார் போர்: ஐக்கிய இராச்சியததுக்கும் சன்சிபாருக்கும் இடையில் இடம்பெற்ற போர் உலகின் மிககுறைந்த நேரத்தில் (09:02 - 09:40) நிகழ்ந்து முடிந்த போராகும்.
- 1916 - முதலாம் உலகப் போர்: ருமேனியா ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. இது பினனர் ஜேர்மனி, பல்கேரியப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது.
- 1921- 1916 இல் ஓட்டோமான் பேரரசுடன் போரிட்ட செரீப உசைன் பின் அலி என்பவரின் மகனை பிரித்தானியர் ஈராக்கின் மன்னனாக ஈராக்கின் முதலாம் பைசல் என்ற பெயரில் அறிவித்தனர்.
- 1928 - போருக்கெதிராக கெலொக்-பிறையண்ட் உடன்பாட்டில் 60 நாடுகள் கைச்சாத்திட்டன.
- 1939 - உலகின் முதலாவது ஜெட் விமானம் Heinkel He 178 சேவைக்கு விடப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் நியூஜோர்ஜியா தீவை விட்டு விலகினர்.
- 1952 - லக்சம்பேர்க்கில் மேற்கு ஜேர்மனிக்கும் இஸ்ரேலுககும் இடையில் போர் நட்டஈடு தொடர்பாக உடனபாடு ஏற்பட்டது. இதன்படி ஜேர்மனி 3 பில்லியன டொச்சு மார்க்கை நட்டஈடாகச் செலுத்த ஒப்புக் கொணடது.
- 1957-மலேசியாவின் அரசியலமைப்பு சாசனம் அமுலானது.
- 1962 - நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.
- 1975 - போர்த்துக்கீசத் திமோரின் ஆளுநர் அதனாட்சியை கிளர்ச்சியாளர்களிடம் கைவிட்டு தலைநகர் திலியை விட்டு அட்டாவுரோ தீவுக்குத் தப்பி ஓடினார்.
- 1985 - நைஜீரியாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து மால்டோவா பிரிநதது.
- 2003 - செவ்வாய்க் கோள் பூமிக்கு மிகக் கிட்டவாக 55,758,006 கிலோமீட்டர் தூரத்துக்கு 60,000 ஆணடுகளுக்குப் பின்னர் வந்தது.

### பிறப்புக்கள்

- 1770-ஹெகல், ஜேர்மன் மெய்யியல்அறிஞர் (இ. 1831)
- 1876 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (இ. 1954)
- 1908 - தண்டபாணி தேசிகர், கர்நாடக இசைப் பாடகர்
- 1908 - டொன் பிறட்மன், ஆஸ்திரேலியத் துடுப்பாளர் (இ. 2001)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர

### இறப்புகள்

- 1879 - ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் (பி. 1795)
- 1963 - டபிள்யூ.இ.பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க மனித உரிமையாளர் (பி. 1868)
- 1965 -லெ கொபூசியே, சுவிட்சர்லாந்து கட்டிடக் கலைஞர் (பி. 1887)
- 1975-முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர் (பி.1892)
- 1976-முக்கேஷ்,இந்தியப் பின்னணிப் பாடகர் (பி. 1923)
- 1979 - [illegible] பிரித்தானிய அட்மிரல் (பி. 1900)



தக்காளி மற்றும் வெள்ளரிக்காய் பழவகையைச் சார்ந்தவை.




மின்னலின் சராசரி நீளம் சுமார் 6 கிலோ மீட்டர் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...டேவிட் பூன், டீன் ஜோன்ஸ், மூடி ஆகிய மூவரும் சதம் அடித்தனர். மொத்த ஸ்கோர் 346 ரன்கள். இந்தப் போட்டியில் கபில் பௌலிங்கில் சாதனை செய்தார். நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லிக்கு பிறகு 400 விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.முதல் இன்னிங்ஸ் ஆடிய சச்சின் இந்தமுறை ரசிகர்களை ஏமாற்றவில்லை. பொறுமையாக ஆடி சதம் அடித்தான். இருப்பினும் விட்னியின் அபார பந்து வீச்சில் சாஸ்திரி, கபில், அசார், வெங்சர்க்கார் அனைவரும் சீட்டுக் கட்டுப்போல் சரிந்தனர். முன்னணி வீரர்கள் அனைவரும் ஆட்டம் இழக்க அடுத்த முனையில் சச்சின் மட்டுமே நிலை குலையாமல் நின்று கொண்டிருந்தார். கிரண் மூரே ஜோடியாக வந்தார். ஆனால், கிரண் மூரேயை ஆட விட்டால் அவர் அவுட் ஆகச் சாத்தியக்கூறுகள் அதிகம் என்று எண்ணிய சச்சின் கடைசி பந்தில் ஒரு ரன் ஓடி மீண்டும் பேட்டிங் செய்யும் உரிமையைத் தக்க வைத்துக் கொண்டான். இதை ஒவ்வொரு ஓவர் இறுதியிலும் செய்ததால் ஆஸ்திரேலிய வீரர்கள் சச்சின் ஒருவனுக்கே பௌலிங் செய்து வெறுத்துப் போய் விட்டனர்.

சச்சினின் இந்தப் பொறுப்பான ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. தானும் விளையாடவேண்டும். அதேசமயம் விக்கெட்டையும் காப்பாற்றவேண்டும் என்ற சச்சினின் சாதுர்யம் பரவலாகப் பேசப் பட்டது. இப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாக ரன்கள் சேர்த்து சச்சின் இறுதியில் சதத்தை அடித்தேவிட்டான். முன்னணி வீரர்கள் அனைவரும் குறைந்த ரன்களுடன் அவுட் ஆக, சச்சினின் தனி மனிதனாக நின்று ஆடி பாங்கை ஆஸ்திரேலிய ரசிகர்கள் அணு அணுவாக ரசித்தனர். கடைசியில் விட்னி பந்து வீச்சில் காட்ச் பிடிக்க சச்சின் ஆட்டம் 114 ரன்களில் முடிவிற்கு வந்தது. மொத்தம் 141 ரன்களுக்கு இந்தியா ஆல் அவுட் இதில் சச்சின் அடித்தது 114. மீதி 27 ரன்களுக்கு 9 இந்திய விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. சச்சின் பெவிலியன் திரும்பியதும் ரசிகர்கள் கைதட்டி அவனை வாழ்த்தினார்கள். ஆஸ்திரேலியா 4-0 எனத் தொடரை வென்றது.

இந்தியா தொடரை இழந்தாலும் சச்சின் தனிப்பட்ட முறையில் ரன்களைக் குவித்தான். ஆஸ்திரேலிய வீரர்கள் பத்திரிகைகள் அனைவரும் வழக்கம்போல் சச்சினைப் பாராட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன்னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்குகள் அனைத்துமே சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரியவே இல்லை என்றார் ஆஸ்திரேலிய கேப்டன் பார்ட்ரோ, 19 வயதிலும் இவன் இந்தப் போடுபோட்டால், 25 வயதில் என்ன செய்வானோ என்பதை நினைத்தால் உதறலாக இருக்கிறது என்றார். ஆஸ்திரேலிய வானொலி வர்ணனையாளர் டிம் லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன். இவன் எதுவேண்டுமானாலும் செய்வான் என்றார்.

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்

ஆக, தொடரை இந்தியா இழந்தாலும் சச்சின் ஆஸ்திரேலிய ரசிகர்களின் இதயத்தைக் கவர்ந்து விட்டான். முன்னாள், இந்நாள் கிரிக்கெட் வீரர்கள் தொடங்கி சாதாரண பார்வையாளர் வரை அனைவரையும் சச்சின் வசீகரித்தான். சச்சினின் ரசிகர் பட்டாளம் அதிலிருந்து இந்திய எல்லைகளைத் தாண்டி உலக அளவில் விரியத்தொடங்கியது.

குடும்பத்தை விட்டு நீண்ட நாட்கள் ஆஸ்திரேலியாவிலிருந்த காரணத்தினால் இந்திய வீரர்களுக்கு ஹோம் சிக் ஏற்பட்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். எனவே, உலகப் போட்டிகள் அடுத்த இரு வாரங்களில் அதே ஆஸ்திரேலியாவில் தொடங்க இருக்கும் நிலையிலும் அங்கே தங்காமல் உடனடியாக அனைவரும் இந்தியா திரும்பிவிட்டனர்.



ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகைகள் அனைவரும் சச்சினைப் பாராட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன்னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்குகள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரியவே இல்லை என்றார். ஆஸ்திரேலிய கேப்டன் பார்டரோ, 19 வயதிலும் இவன் இந்தப் போடுபோட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என்பதை நினைத்தால் உதறலாக இருக்கிறது என்றார். ஆஸ்திரேலிய வானொலி வர்ணனையாளர் டிம்லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எதுவேண்டுமானாலும் செய்வான் என்றார்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 08 இன் பலன்கள்



### தோற்றம்

**73** செவ்வாயுடன் சனி சேர்ந்து உண்டாகும் ஆதிக்கம் இது. சராசரி உயரமிருக்கும். கட்டான உடல் அமையும். நல்ல பலசாலியாக இருப்பார்.

சரிந்த நெற்றி அழகான கண்கள், தலை நிறைய முடி, நீண்டு வளைந்த புருவம், நீண்ட ஒழுங்கான மூக்கு, சிறிய, பருத்த உதடுள்ள வாய், சதைப்பிடித்த கன்னம், வரிசையான பற்கள் அமைந்திருக்கும்.

மேலிரு முன்பற்கள் பெரிதாக இருக்கும். சிவப்பாக இருப்பர். வீரமுள்ள தோற்றமிருக்கும்.

### குணம்

பார்க்க அமைதியானவர்களாக இருக்கும் இவர்கள் சண்டைகாரரே. துணிவும் உடல்பலமும் கொண்டவர். பிறரை நன்கு எடைபோட்டுவிடுவார். தந்திரமாகப் பிரச்சினையைச் சமாளிப்பர்.

முடியாவிடில் நேரிடையாகச் சண்டையில் இறங்கிவிடுவர். வீரமும் நியாயமும் கடும் உழைப்பும் உள்ளவர்.

இவர் பக்கமே பலர் ஆதரவு இருக்கும். இதனால் இவர்களைப் பிறர் முரடாகவே பார்ப்பர். ஆனால், இவர்களின் மதிநுட்பம் போகப் போகப் புரியும்.

அடுக்கடுக்காகத் துன்பங்கள் வந்தாலும் தளரமாட்டார். ஒன்றை அடையக் கடும் முயற்சி செய்வர். இளம் வயதில் வறுமை இருக்கும். சிலர் பெற்றோரில் ஒருவர் மறைய நேரிட்டு விடலாம். ஆழ்ந்த உணர்வுடனிருப்பர்.

இவர்கள் வாழ்க்கை காரசாரமாக இருக்கும். வாழ்க்கையில் சவால்களைச் சந்தித்து வெற்றி காண விரும்புவர்.

பிறருக்காகவும் போராடுவர். வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்பட மாட்டார். மிகவும் கண்டிப்பு, கறார் பேச்சால் பிறர் திட்டக் கூடிய நிலை பெறுவர். காலில் காயம்படும்.

செலவாளியாக இருப்பர். வைத்தியத்திற்கு நிறையச் செலவு செய்ய நேரும். தம் மக்கள் என்ற பற்றுதலுள்ளவர்.

பொதுத் தொண்டில் ஈடுபடுவர். தேசத்திற்காக நல்லவற்றுக்குப் போராடுவர். விபத்து ஏற்படலாம்.

வேதாந்தம் யோகம் என ஆன்மிகத்திலும் துறவிலும் மனம் போகும். விரோதிகளால் ஆபத்து உண்டு.

### குடும்பம்

அடிக்கடி விழுந்து எழும் வாழ்க்கையில் நிறைய அனுபவம் ஏற்படும். வறுமை, வளமை, திண்டாட்டம் நிம்மதி மாறி மாறியமையும்.

சொந்தக் காலை நம்பியே வாழ்க்கை நடத்துவர். தாய்மீது பற்றதிகம் வைத்திருப்பர்.

கோபம், முரட்டுத்தனம், அடக்கு முறையில் குடும்பத்தில் சண்டை மூளும். சகோதர சகோதரிகளிடம் பாசமும் இருக்கும். சண்டையும் நடக்கும். மண வாழ்க்கை அத்தனை அமைதியாயிராது.

வறுமையும் காரணமே. மனைவியை இழப்பார் அல்லது பிரிவார். வாரிசு அமைவது துர்லாபம். திடீரென வாழ்வு முடியும்.

### தொழில்

இவர்கள் எதையும் பக்குவமாக முழு ஈடுபாட்டோடு செய்வர். வறுமையை மீற எடுத்துக்கொண்ட தொழிலிலேயே முன்னேறிவிட முடியும். ஒரே தொழிலில் நீட்டித்திருப்பர்.

கலையும் கைவரும். எழுத்தும் பேச்சும் வந்தாலும் நடிப்பையே விரும்புவர்.

நிலம் தொடர்பான தொழிலும் கைகொடுக்கும். சிவில் இன்ஜினியரிங், ரியல் எஸ்டேட், விவசாயம் எண்ணெய் எரிபொருள் இரும்பு தொடர்பான தொழில் நன்மையாகும்.

கால்நடைப் பண்ணை, விவசாயப் பண்ணை தோட்டம் எல்லாம் பொருத்தமானவை.

கல்லூரியில் அக்ரீகல்சுரல் பேராசிரியராகலாம். இதய நரம்பு ஸ்பெஷலிஸ்ட் மருத்துவராகலாம்.

அரசியலிலும், ராணுவம், பொலிஸ் போன்ற துறைகளிலும் பெரும்பதவியடைய முடியும்.

யோகாசன நிபுணர், போர்க்கலைப் பயிற்சியாளராகலாம். வர்ம சண்டை, வைத்தியம் அறிந்தவராவர். பெண்கள் நர்சுகளாகலாம்.

### நோய்

நீரிழிவு சிறுநீரக பாதிப்பு வாத சம்பந்தக்கோளாறுகள் வரலாம். மூச்சுக் கோளாறு, மூட்டு வலிகளும் தலைவலியும் கால் பாதிப்பும், கண் பாதிப்பும் உண்டாகும்.

வயிற்று வலி படுத்தும். உஷ்ணப் பாதிப்பு உண்டு. பல்நோய் ஈறு நோய் காணும்.

இதயம் என்லார்ஜாகும். விபத்து, அடி இடி படுதலும் தாக்கப்படுதலும் கூட ஏற்படலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு புதிய நிர்வாகத்தை ஏற்படுத்துங்கள்

## வண்ணாங்குளம் மக்கள் வேண்டுகோள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வண்ணாங்குளம் கிராம சேவையாளர் பிரிவின் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறாமையால் கிராம அபிவிருத்திகளின் அனைத்து செயற்பாடுகளிலும் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 16.04.2010 இல் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இக்கிராமத்தில் 228 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இருவருடங்களுக்கு ஒரு தடவை கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகத் தெரிவு இடம்பெற வேண்டும்.

இந்நிலையில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்ட இக்கிராமத்தில் 18.08.2010 இல் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்று நான்கு வருடங்கள் கடந்து விட்டன. இவ்வாறு வருடங்கள் கடந்த நிலையிலும் இச்சங்கம் தெரிவான காலத்தில் இருந்து எந்தவிதமான கூட்டங்களும் இடம்பெறாத நிலையில் அது தொடர்பான கணக்கறிக்கைகள், கூட்டறிக்கைகள், சந்தாப்பண விபரங்கள் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெறாத நிலையில் சங்கச் செயற்பாடு பெயரளவிலேயே உள்ளது. எனவே கிராம அபிவிருத்திக்கு தடையாகவுள்ள இந்நிர்வாகத்தை உடன் கலைத்து கிராம அபிவிருத்தியில் அக்கறையுள்ளவர்களை உள்ளடக்கி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதன் மூலமே கிராம அபிவிருத்தி திட்டங்களை சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

ஆதலால் கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பொறுப்புடன் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்ய முன்வருவாரா? என கிராம மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-267)

# பாட சித்தி வீதத்தை அதிகரிக்க மாணவர்களுக்கு பயிற்சி புத்தகங்கள்

(மல்லாவி)

தேசிய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள மில்கோ நிறுவனம் நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிக்கும் முகமாக பயிற்சி புத்தகங்களை அண்மையில் வழங்கியுள்ளது.

இப்பயிற்சி புத்தகங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டு மற்றும் சுதந்திரபுரம் கிராமங்களில் சுயதொழில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் கீழுள்ள பயனாளிகளின் பிள்ளைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.




இதில் கடந்த காலங்களில் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களுக்கான வினாவிடைகள் உள்ளடக்கிய பயிற்சி புத்தகங்களாக இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் மில்கோ நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் கப்பு ஆராச்சி, முல்லை. மாவட்ட பண்ணைப் போதானாசிரியரும் முகாமையாளருமான வா. தயாபரன், கிராம சேவையாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (2-15)

## கிராமிய வங்கி திறப்பு விழா


(கண்டாவளை)

கரைச்சி வடக்கு ப.நோ. கூட்டுறவு சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தருமபுரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கரைச்சி வடக்கு ப.நோ.கூட்டுறவு சங்கத்தலைவர் சி.தணிகாசலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கண்டாவளைபிரதேசசெயலர் கு.முகுந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரி.எம்.குரூஸ் கலந்து கொள்ளவுள்ளார். (2-263)

# பூநகரி பொது வைத்தியசாலை திறப்பு விழா இன்று இடம்பெறும்



(பூநகரி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட 40 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட பூநகரி பொது வைத்தியசாலை இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொண்டு வைத்தியசாலை கட்டடத்தை திறந்து வைப்பார்.

இவ்வைத்தியசாலையின் இறுதிக் கட்ட வேலைகளை பூர்த்தியாக்குவதற்காக நேற்றும் நேற்று முன்தினமும் நூற்றுக்கணக்காண படையினர் பணியில் ஈடுபட்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

தற்போதைய புதிய வைத்தியசாலைக்கான அடிக்கல் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வைபவரீதியாக நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

## மஹோற்சவம்

(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். அன்றையதினம் காலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா வும் மறுநாள் சனிக்கிழமை கும்பா பிஷேக தினத்தன்று தீர்த்தோற்சவ மும் இடம்பெற்று 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

ஆகம கிரியா பாவலர் சிவஸ்ரீ இரவீந்திர உமாசுதக்குருக்கள் பிரதமகுருவாக பங்கேற்று பூஜை வழிபாடுகளை நடத்தவுள்ளதுடன் பிரம்மஸ்ரீ த. பிரசாந் சர்மா உட்பட பல சிவாச்சாரியார்கள் இணைந்து பூஜை வழிபா டுகளை நடத்தவுள்ளனர். 10 நாட்கள் இடம்பெறவுள்ள இம் மஹோற்சவ திருவிழாவில் தினமும் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (2-250)

# வலம்புரி செய்தியை அடுத்து வீதிப்புனரமைப்புப் பணி ஆரம்பம்



(முல்லைத்தீவு)

வலம்புரியில் 07.10.2013 அன்று வெளியான செய்தியை அடுத்து வற்றாப்பளை மகா வித்தியாலய பாடசாலை வீதி புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியானது (150 மீற்றர்) நீண்ட காலமாக திருத்தப் பணிகள் எதுவுமின்றி குன்றும் குழியுமாக காணப்பட்ட நிலையில் வலம்புரி பத்திரிகையில் செய்தியாக சுட்டிக்காட்டியதை அடுத்து கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை மாணவர்களின் நலன் கருதி இக்கருங்கல் வீதியை தார் வீதியாக புனரமைக்கும் பணி நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (2-267)

## புகைபிடித்தலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களான பொதுச் சந்தை, பேருந்து நிலையம், பிரதான சந்திகள், மாவட்ட செயலக வளாகம், முல்லைத்தீவு சிறுவர் பூங்கா ஆகிய இடங்களில் புகைபிடித்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பொது இடங்களில் புகைபிடித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். இதைக் கட்டுப்படுத்த கரைதுறைப்பற்று பிரதேச சபையை நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்கின்றனர். (2-267)

# நிர்வாகத் தெரிவு இடம்பெறாது இயங்கும் பொது அமைப்புக்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதிச் செயலாளரை மக்கள் கோருகின்றனர்

(மல்லாவி)

ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் பொது மக்கள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அமைக்கப்பட்ட சில பொது அமைப்புக்களில் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறும் புதிய நிர்வாக மாற்றங்கள் நடைபெறாது அவை தொடர்ந்தும் இயங்கும் காரணத்தால் தாம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதோடு சில அமைப்புக்களில் நிதி மோசடிகளும் இடம்பெற்று வருவதாக அப்பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.

ஆதலால் குறித்த அமைப்புக்களில் புதிய நிர்வாக மாற்றத்தினை மேற்கொள்வதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலாளர் எஸ்.குருபரன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவது,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கிராமங்களில் மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கமக்கார அமைப்புக்கள் என பல தரப்பட்ட பொது அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவற்றில் பல கிராமங்களில் வருடம் தோறும் புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஒரு சில கிராமங்களில் மேற்படி அமைப்புக்கள் புதிய நிர்வாகங்களை தெரிவு செய்யாதுள்ளன.

இதனால் மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், மலசல கூடங்கள் அமைத்தல், உரவிநியோகங்கள் எனப் பல தரப்பட்ட உதவித் திட்டங்களில் பாகுபாடுகள் காட்டப்படுவதுடன் ஊழல்களும் நிதி மோசடிகளும் இடம்பெற்றுள்ளன.

எனவே புதிய நிர்வாகங்களை தெரிவு செய்வதன் மூலம் இவ்வாறான மக்கள் பாதிக்கப்படுவதனை தவிர்ப்பதுடன் கிராம மட்டங்களில் புதிய நிர்வாகம் அமைகின்ற போது வளர்ச்சியடையக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## முதியோருக்கான பொது அறிவுப் போட்டி

(பூநகரி)

பூநகரி பிரதேச முதியோர் சங்கப் பொது அறிவுப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் 19 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் இருந்து 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் பங்குசிகொள்ளவுள்ளனர்.

இதில் வெற்றி பெறும் 5 முதியோர்கள் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கூட்டமைப்பின் இந்தியப் பயணத்திற்கு அரசின் ஏமாற்று வேலையே முழுக்காரணம்

## பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.சுட்டிக்காட்டு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஏமாற்று நடவடிக்கைகள் காரணமாகவே அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகள் தொடர்பில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்லவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவிக்கையில், "அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது.

இவ்விடயத்தில் இந்த அரசாங்கம் இனியும் ஏமாற்றுப் போக்கைக் கடைப்பிடித்தால் அது இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி பொதுவானதொரு இணக்கப்பாட்டுக்கு அரசாங்கம் வரவேண்டும். இத்தகையதொரு தீர்வுப் பொறிமுறைக்கு பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்கும்.

இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடமேறியது முதல் இன்று வரை தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. தீர்வுப் பொறிமுறையாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த 13 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தான் தயார் என ஜனாதிபதி பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். இந்த உறுதி மொழி ஏன் இன்னும் நிறைவேற்றப்படவில்லை? இந்த அரசாங்கம் காலம் கடத்துவதால் தான் எமது நாட்டுப் பிரச்சினை இன்று கடல் தாண்டிச் சென்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உரிய வகையில் பேச்சுவார்த்தை நடத்தி, உள்ளக தீர்வுப் பொதியைப் பயன்மிக்கதாக அரசாங்கம் மாற்றி அமைத்திருந்தால் புதுடில்லியிடம் சென்று பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டிருக்காது.

எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு இனியும் காலம் கடத்துமானால் மேலும் பல் நாடுகளிடம் உதவி கோரி செல்லவேண்டிய நிலை கூட்டமைப்புக்கு ஏற்படும்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தி கௌரவமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைப்பு வழங்கும்" என மேலும் தெரிவித்துள்ளார்.(இ)

# 18 கி.கிராம் முந்திரி திருடிய இராணுவச் சிப்பாய் கைது

புத்தளம் வண்ணாத்துவில்லு பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றிற்குள் களவாக புகுந்து 18 கிலோ கிராம முந்திரியை கொள்ளையிட்ட இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மாத்தளை - நாவுல தேசிய பாதுகாப்பு படையணியில் பணியாற்றி வந்துள்ளார்.

வண்ணாத்துவில்லு 15 கட்டை மங்களபுர என்ற கிராமத்தை சேர்ந்த இராணுவ சிப்பாய் விடுமுறையில் வீட்டிற்கு சென்றிருந்தார.

இந்நிலையில் மேற்படி திருட்டுச் சம்பவத்தில் குறித்த இராணுவச் சிப்பாய் ஈடுபட்டுள்ளார்.

சந்தேக நபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். வாண்ணாத்துவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு

### சின்னத்துரை குணரெத்தினம்



நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை அம்பிகை நகர் 7 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணரெத்தினம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேலணை அம்பிகை நகர் அம்பலவாணர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### விஜயரட்ணம் சுதாகரன்



சுன்னாகம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடலித்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் சுதாகரன் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10மணிக்கு வடலித்தோட்டம், மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மானிப்பாய் நவாலியில் அமைந்துள்ள பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### முதலித்தம்பி பசுபதிப்பிள்ளை



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Bern ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முதலித்தம்பி பசுபதிப்பிள்ளை (பிரபல வர்த்தகர்) கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Fridhof am Hornli,Hornlialle 70, 4125, Riehen, Swiss என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி மகாலிங்கம் சிவபாக்கியம்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சிவபாக்கியம் கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி பொன்னையா மனோன்மணி



சங்கானை மேற்கு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் தனிநாயகம் வீதி, கூமாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மனோன்மணி (ஆங்கில ஆசிரியர், ஓய்வு பெற்ற அதிபர்) கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கூமாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### ஜெயசீலன் அன்னப்பா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு சொய்சாபுர தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசீலன் அன்னப்பா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று அகாலமரணமானார்.


அன்னாரின் இறுதி ஆராதனை இன்று மாலை 3.30 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி நடராஜா நாகம்மா



புத்தூர் வாதரவத்தையை பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி திருநெல்வேலி கிழக்கு திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா நாகம்மா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

### நாகன் செல்லக்குட்டி



ஏழாலை கிழக்கு அண்ணமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் - செல்லக்குட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

# அமைச்சர் வாசுதேவவின் மருமகளுக்கு அமெரிக்க தூதரகத்தில் வேலைவாய்ப்பு

## நியமனத்தில் முறைகேடு என சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் இடதுசாரி தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவின் மருமகளுக்கு வோஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் தொழில்வாய்ப்பு ஒதுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பிங்காம்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட ஜனத்ரி நாணயக்காரவுக்கே இந்த தொழில் வாய்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் தகவல்படி ஜனத்ரி ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளக கடமைகளில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கை தூதரகத்திலும் அவர் உதவிகளை செய்திருப்பதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவருக்கு இராஜதந்திர பணிகளை செய்யும் அளவுக்கு அனுபவம் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஜாலிய விக்கிரமசூரிய அமெரிக்காவில் உள்ள தூதரத்தின் பொறுப்பாளராக இருந்தபோது அரசியல் ரீதியாக பணியில் அமர்த்தப்பட்டார.

இந்தநிலையில் அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு பாரிய சவால் விடுக்கப்பட்டுள்ள நிலையில் அனுபவம் இல்லாத அமைச்சர்களின் பிள்ளைகளும் உறவினர்களும் அங்குள்ள தூதரகத்துக்கு நியமிக்கப்படுவது பலரது விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. -(இ)

# பொலிஸ் நிலையத்தில் பெண் மீது கத்திக்குத்து

குருணாகல் பொலிஸ் நிலையத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணுடன் காதல் தொடர்பு வைத்திருந்த நபரே இவ்வாறு நேற்று முன்தினம் கத்திக்குத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த பெண குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பேருந்து தரிப்பிடம் நொறுக்கப்பட்டது

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் கிராண்ட்பாஸ் ஹிங்குருகொட சந்தி அருகில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பிட நிலையம் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத விஷமிகளால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவம் இந்த இடத்தில் நடைபெற்றுள்ளது. இச்செயல் இரண்டாவது தடவையாகவும் நிகழ்ந்தமையால் பேருநது தரிப்பிட நிலையம் அமைக்கப்படடுள்ள திரையில் காட்சிப்படுத்தியுள்ள விளம்பர நிலையத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியே காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். இலங்கையிலுள்ள பிரபலமான நிறுவனமொன்றின் பெறுமதிமிக்க விளம்பரத்திரை இந்தத் தாக்குதலின் போது நொறுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இந்த நிறுவனத்தின் விளம்பரத்திரையே நொறுக்கப்பட்டது. இது தொடர்பாக கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

# யுவதியிடம் அறை வாங்கிய இளைஞர் வைத்தியசாலையில்

குருணாகல் வாரியபொலவில் யுவதி ஒருவரால் தாக்கப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் மாலை வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்காகவே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவரை குருணாகல் வைத்தியசாலைக்கு மேலதிக சிசிக்சைக்காக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் யுவதி ஒருவர் இளைஞன் ஒருவரை வாரியபொல பேருந்து நிலையத்தில் வைத்து தாக்கிய சம்பவம் முகநூலில் வைரஸ் போன்று பரப்பப்பட்டது.


தாம் அணிந்திருந்த ஆடை குறித்து, அந்த இளைஞன் கூறிய வார்தவைக்காகவே யுவதி அவரை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இளைஞர் எவ்வித எதிர்ப்புகளையும் அதன்போது வெளியிடவில்லை.

30 வயதான செல்வா என்ற றொபர்ட் தாசன் சந்திரகுமார் என்ற இளைஞனே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பூதம் வந்துவிடக்கூடாது!



சுதந்திரநாள் அன்று தில்லி செங்கோட்டையில் கொடியேற்றி வைத்து பிரதமர் நரேந்திர மோடி பேசும்போது, திட்டக்குழுவை கலைத்துவிட்டு புதிய அமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். மாற்றாக அமைக்கப்படும் புதிய அமைப்புக் குறித்து மக்களின் யோசனைகளையும் பிரதமர் நரேந்திர மோடி கேட்டியிருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு ஹரிபுராவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமையேற்று பேசிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தனது உரையில், சுதந்திர இந்தியாவின் முதலாவது பணியாக தேசியத் திட்டக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற யோசனையை முதன்முதலாகத் தெரிவித்தார். தெரிவித்ததோடு நிற்கவில்லை. அக்குழுவின் முதலாவது தலைவராக ஜவஹர்லால் நேருவை நியமித்தார். இக்குழுவில் பொருளாதாரம், வேளாண்மை, தொழில், கல்வி, பொறியியல், கட்டுமானம் போன்ற பல துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் அங்கம் வகித்தனர்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பாக அமைக்கப்பட்ட இக்குழு வகுத்த திட்டங்கள், சுதந்திர இந்தியாவில் பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையில் 1951 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட திட்டக் குழுவினால் ஏற்கப்பட்டு அடுத்தடுத்து செயற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டன.

திட்டக் குழுவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, பிரதமர் நேருவே அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்தில் வி.டி.கிருஷ்ணமாச்சாரி, அசோக் மேத்தா போன்றவர்கள் துணைத் தலைவர்களாகவும், ஜே.சி. குமரப்பா, பேராசிரியர் மகாலனோபிஸ், பீதாம்பர் பந்த் போன்ற நிபுணர்களும் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

திட்டமிடுதல், கொள்ளை வகுத்தல், நிறைவேற்றல் போன்றவற்றில் சிறந்த வழிகாட்டும் நெறிமுறைகளை இவர்கள் உருவாக்கினார்கள். அரசின் துணை அமைப்பாகத் திட்டக்குழு செயற்படாமல் தன்னிச்சையான ஆலோசனை வழங்கும் ஒரு அமைப்பாக செயற்பட்டது.

1970 இற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சியின்போது திட்டக்குழு மத்திய அரசின் உறுப்பாக ஆக்கப்பட்டது. மத்திய திட்டத்துறை அமைச்சர்களாக இருந்தவர்கள் திட்டக் குழுவுக்குத் துணைத் தலைவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இதன் விளைவாகத் திட்டக் குழுவின் சுயாட்சித் தன்மை படிப்படியாக மறைந்தது. அதனுடைய நம்பகத் தன்மையும் திட்டங்களைச் சுதந்திரமாக வகுக்கும் முறையும் கேள்விக்குள்ளாயின.

குறிப்பாக, காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் ஜனதா தள ஆட்சிக்காலத்திலும் திட்ட அமைச்சர்களாக இருந்த டி.ஆர்.காட்கில், மது தண்டவதே ஆகியோர் திட்டக்குழுவின் துணைத் தலைவர்களாக இருந்தாலும் துணைப் பிரதமர்களாகவே செயற்பட்டார்கள். திட்டக்குழுவும் எல்லையற்ற அதிகாரம் படைத்த குழுவாக மாறியது.

இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தை சிதறடித்த முக்கிய அமைப்பு திட்டக்குழுவே, அரசியல் சட்ட ரீதியாகவோ, நாடாளுமன்ற ரீதியாகவோ திட்டக்குழு அமைக்கப்படவில்லை. நேருவின் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி திட்டக்குழு அமைக்கப்பட்டது. திட்டக்குழுவுக்கு வரம்பற்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

திட்டங்களை வகுக்கவும், மாநிலங்களின் திட்டங்களுக்காக மானியங்களையும் கடன்களையும் அளிக்கவும் திட்டக் குழுவுக்கு அதிகாரம் உண்டு. மாநிலங்கள் வகுக்கும் திட்டங்களுக்கு மத்தியத் திட்டக்குழுவின் அங்கீகாரம் அவசியம்.

மாநில அரசுத் துறைகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களையும் மத்தியத் திட்டக் குழு மேற்பார்வை இடும். இத்தனை அதிகாரங்கள் இருந்தாலும் இக்குழுவிற்கு அரசியல் சட்ட அங்கீகாரம் கிடையாது என்பது வியப்பளிக்கும் உண்மையாகும்.

மாநிலங்களின் அதிகாரத்திற்குட்பட்ட துறைகளான கல்வி, பாசனம், சாலை அமைத்தல், கால் நடை வளர்ப்பு, கூட்டுறவு, தொழிலாளர், வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கான கடன்கள், மானியங்கள் போன்றவற்றிற்கான நிதியைத் திட்டக்குழு முடிபு செய்த பரிந்துரையின்படி மத்திய அரசு வழங்குகிறது. எனவே, மாநிலங்களுக்குட்பட்ட துறைகளிலும் மறைமுகமாக மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துகிறது.

1958 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தின் மதிப்பீட்டுக் குழு தனது அறிக்கையில் திட்டக்குழு இயங்கு முறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியது.

திட்டக்குழு ஓர் ஆலோசனைக் குழுவாக இயங்கவில்லை. மற்றொரு அதிகார அமைப்பாகவும் இந்திய அர்சின் ஒரு பகுதியாகவும் அது உருவாகிவிட்டது.

திட்டக்குழுவின் [illegible] கைகளின் விளைவாக மாநிலங்கள் தங்களின் சுயாதிக்கத்தை இழக்க நேரிட்டுள்ளது. திட்டங்களை வகுப்பதிலும் மாநிலங்களுக்குப் போதிய பங்கில்லை. மாநில முதலமைச்சர்களைக் கொண்ட தேசிய வளர்ச்சிக்குழு திட்டங்களை வகுப்பதில் போதுமான அளவுக்கு அதிகாரமில்லாத அமைப்பாக இருக்கிறது.

திட்டக்குழு தயாரித்த திட்டங்களை பரிசீலனை செய்து திருத்தியமைக்க தேசிய வளர்ச்சிக் குழுவுக்கு அதிகாரம் இல்லை. நாடாளுமன்றத்தில் திட்டங்கள் விவாதத்திற்கு வைக்கப்படுவது ஒரு சடங்காக நடத்தப்படுகிறது. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணானதாகும்.

நாடாளுமன்றத்திற்கோ மாநில முதல்வர்களைக் கொண்ட தேசிய வளர்ச்சிக் குழுவிற்கோ திட்டங்களை வகுக்கும் பணியில் போதுமான பங்கு இல்லை என்பது ஜனநாயக முறைக்கு ஒவ்வாதது. தேசிய வளர்ச்சிக் குழுவிற்கும் மேலான அமைப்பாக திட்டக்குழு உருவாகிவிட்டது.

திட்டக்குழுத் தயாரிக்கும் திட்டம் மாநிலங்களுக்கு முதலில் அனுப்பி வைக்கப்படுகிறது. அதை அடிப்படையாகக்கொண்டு மாநிலங்கள் தங்கள் திட்டங்களை உருவாக்க வேண்டியுள்ளது. மாநிலங்கள் உருவாக்கும் திட்டங்களை திட்டக்குழு மீண்டும் பரிசீலனை செய்து சிலவற் றைச் சேர்க்கிறது; சிலவற்றை நீக்குகிறது.

இதில் தலையிட மாநிலங்களுக்கு உரிமை இல்லை. இறுதியாகத் திட்டக்குழு என்ன முடிபு செய்திருக்கிறதோ, அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய பரிதாபகரமான நிலையில் மாநிலங்கள் உள்ளன.

1967 ஆம் ஆண்டு வரை, ஒரே கட்சி மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சி நடத்திய காரணத்தினால் அந்தக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டன.

1967 இற்குப் பிறகு பல்வேறு கட்சிகள், பல்வேறு மாநிலங்களில் ஆட்சிக்கு வந்தன. அந்தந்தக் கட்சிகளுக்கென்று தனியான பொருளாதாரக் கொள்கைகள் உண்டு. அவற்றுக்கிணங்க அவை வகுக்கிற திட்டங்களை மத்தியில் ஆட்சி நடத்துகிற கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப அமைக்கப்பட்ட திட்டக்குழு ஏற்க மறுக்கிறது. இது ஜனநாயக விரோதச் செயலாகும்.

திட்டக்குழுவைப்பொருத்த வரையில் அது அரசியல் சட்டத்தில் இடம்பெறாத ஓர் அமைப்பாகும். எனவே, அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக அது செயற்படும் சமயங்களில் அதைத் தடுக்க முடியவில்லை.

இந்திய அரசியல் சட்டத்தின்படி பல்வேறு கட்சிகள் மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சிக்கு வரலாம் என்ற நிலைமையைத் திட்டக்குழு அலட்சியம் செய்கிறது. அரசியல் ரீதியான கூட்டாட்சியில் ஒரே மாதிரியான பொருளாதாரத் திட்டம் சாத்தியம் ஆகாது.

மேற்கண்ட உண்மைகளை மத்திய ஆட்சியில் இருந்த எந்தக் கட்சியும் உணரவில்லை. அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட நிதிக்குழுவின் மூலம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட மத்திய அரசின் நிதியைக் காட்டிலும் அதிகமான நிதி அரசியல் சட்டத்தின் ஒப்புதலைப் பெறாத திட்டக்குழுவினால் ஒதுக்கப்படுகிறது.

இப்படிச் செய்வதின் மூலம் மாநில அரசுகளை ஆட்டிப் படைக்க மத்திய அரசினால் முடிகிறது. தனக்கு வேண்டிய அல்லது தனது கட்சி ஆளும் மாநிலத்திற்கு அதிக நிதியைக் கொடுக்கத் திட்டக் குழுவை மத்திய அரசு பயன்படுத்துகிறது. இதன் விளைவாக திட்டக்குழு மத்திய அரசுக்கு அடுத்தபடி அதிகாரம் படைத்த அமைப்பாக விளங்குகிறது.

எனவே, திட்டக்குழுவை கலைப்பதென பிரதமர் நரேந்திர மோடி செய்த முடிபு வரவேற்கத்தக்கது. ஆனால், இதற்கு மாற்றாக அவர் என்ன செய்யப்போகிறார் என்பது மிக முக்கியமானதாகும். திட்டங்களை வகுப்பதிலும் அவற்றை நிறைவேற்றுவதிலும் மாநில அரசுகளுக்கு முழுமையான உரிமை இருக்க வேண்டும்.

அத்திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை மத்திய அரசு அளிக்க முன்வரவேண்டும். பல்வேறு மாநில அரசுகளின் திட்டங்களுக்கிடையே மோதலும் முரண்பாடும் ஏற்பட்டுவிடாமல் கண்காணித்து ஆலோசனைகள் வழங்கும் உரிமை மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும்.

மத்திய- மாநில உறவுகளை மேம்படுத்தும் வகையிலும் மாநிலங்களின் உரிமைகளில் தலையிடாமலும் மாநிலங்களின் வளர்ச்சியே ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி என்ற கருத்தை மனதில் கொண்டு செயற்படும் புதிய அமைப்பினை பிரதமர் நரேந்திர மோடி உருவாக்குவாரானால், அவர் எதிர்பார்த்தது நிறைவேறும்.

மத்திய அரசின் கரங்களில் மேலும் மேலும் அதிகாரத்தைக் குவித்துக் கொள்ளும் வகையில் புதிய அமைப்பினை அவர் உருவாக்குவாரானால் நிலைமை மேலும் சீர்குலையும். பழைய பூதத்தை விரட்டப் போய் புதிய பூதம் கிளம்பி விடக்கூடாது.

-பழ நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாத அரசியல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருதல் அவசியம்

## ரொஹான் குணரட்ன வலியுறுத்தல்

இனவாத மற்றும் மதவாத அரசியல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென பயங்கரவாத தடுப்பு தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.



நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை அரசாங்கத்தினால் மட்டும் மேற்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள், சிவில் சமூகம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத அமைப்பு ஒன்றில் அங்கம் வகித்த ஒருவர், தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கேற்க அனுமதிக்காத வகையில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சட்டம் இருந்திருந்தால் ஜே.வி.பியினால் அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்புக்கள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்ளும் நோக்கிலேயே 13 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மாதிரியிலான தீர்வுத் திட்டங்கள் இலங்கைக்கு பொருத்தமாகாது எனவும், உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முனைப்புக்களில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால் இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது என்பதே தமது நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி, பிராந்திய வலய நாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவார் என கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அரசியல் காரணிகளை விடவும் பொருளாதார விவகாரங்களுக்கு மோடி அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

# வடகொரியா, சிரியா வரிசையில் இலங்கையும் இணைந்துள்ளது

## நியூயோர்க் டைம்ஸ் சாடல்

ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்ற விசாரணையாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்காமையின் அடிப்படையில், வடகொரியா மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம்பெற்றுள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

"நெகிழ்வு தன்மையற்ற இலங்கை" என்ற தலைப்பின் கீழ் நியூயோர்க் டைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் இந்த விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற விசாரணையாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்காமை காரணமாக இலங்கை, சிரியா மற்றும் வடகொரியா ஆகியவற்றின் வரிசையில் இலங்கையும் வந்துள்ளது.

ஏற்கனவே இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட உள்ளூர் விசாரணை தோல்வி கண்டுள்ளதாக ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் போர்க்குற்ற விசாரணைகளின் போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பில் சாட்சியமளித்தவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத போது அந்த விசாரணைகளில் பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியாது.

இந்தநிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் உள்ளூர் விசாரணைகள் உண்மை நோக்கை கொண்டிருந்தால், நல்லிணக்கம், நீதி மற்றும் உண்மை என்ற எதிர்ப்பார்ப்பு இருக்குமானால் அவர் ஐக்கிய நாடுகளின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இந்த தன்மைகள் இல்லாத நிலையிலேயே சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன என்று நியூயோர்க் டைம்ஸ் ஆசிரியர்பீடம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# வறுமை காரணமாக குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளும் நிலை

## மங்கள சமரவீர அரசு மீது கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வறுமை காரணமாக மக்கள், குடும்பத்துடன் தற்கொலை செய்து வரும் நிலையில் முட்டாள் தனமாக ஐஸ் வாளி சவாலில் அரச தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் பாண் இல்லையென்றால் கேக் சாப்பிடுங்கள் என அரசாங்கம் சொல்லும் காலம் தொலைவில் இல்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐஸ் வாளி சவாலை இலங்கையின் சில அரசியல்வாதிகள் முட்டாள்தனமான பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தந்தையின் பெயரை அடகு வைத்து அரசியலில் களமிறங்கிய பெண் அரசியல்வாதி ஒருவர், ஐஸ் வளி சவால் என்ற பெயரில் நீரை விரயமாக்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மொனராகல, அம்பாந்தோட்டை, பொலநறுவை போன்ற பிரதேசங்களில் மக்கள் வறட்சியில் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வரும் நிலையில் ஐஸ் வாளி சவால் என்ற பெயரில் சில அரசியல்வாதிகள் முட்டாள்தனமான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இளைஞர் ஒருவர் தனது நண்பரின் நோயை குணப்படுத்தும் நோக்கில் இந்த ஐஸ் வாளி சவாலை அறிமுகம் செய்திருந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளில் இந்த ஐஸ் வாளி சவால் பிரபல்யம் அடைந்ததனைத் தொடர்ந்து இலங்கையிலும் இந்த சவால் பிரபல்யம் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூடுதலான காலம் கடும் குளிர் நிலவும் எனவும் அந்தக் காலப்பகுதிகளில் பனிக்கட்டிகள் நிறைந்த வாளியை தலையில் ஊற்றிக்கொள்வது சவால் மிக்கது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை போன்ற அதிக வெப்ப நிலை நிலவி வரும் நாடுகளில் குளிர்ந்த நீரில் குளிப்பது சவாலான விடயமன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா, பதுளை, பண்டாரவளை போன்ற பல பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் இந்தச் சவாலை நாள் தோறும் எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வறுமை காரணமாக மக்கள் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளும் காலமாகவே தாம் இந்தக் காலத்தை கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐஸ் வாளி சவாலை ஆளும் கட்சியினர் பிரசாரம் செய்து வருவதன் மூலம் அரசாங்கத்தின் மக்கள் விரோத நிலைப்பாடு மீண்டும் உறுதியாகியுள்ளது என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## உள்மன ஆற்றல்

தையல் ஊசியைக் கண்டு பிடிப்பதற்காக பலகாலம் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார் ஹோ என்ற விஞ்ஞானி.

அவருக்குப் பிடிபடாமலிருந்த விடயம் என்வென்றால், அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படிச் சேர்ப்பது என்பது தான்.

ஏனைய பாகம் மெசினுக்குள்ளே போய்விடுகிறது. அதனால் அந்தப் பாகத்தில் சாதாரணமற்ற ஊசியில் செய்வது போல் நூலை நுழைக்க முடியாது. அப்படி நுழைத்தாலும் எப்படி தைப்பது? இது தான் அவருக்குக்கிருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார். தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார். ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கனவு கண்டார்.

அந்தக் கனவில் அவரை ஒரு மலைச் சாதியினர் பிடித்துக் கொண்டு போய் ஒரு இடத்தில் கட்டிப்போட்டு விடுகிறார்கள்.

அந்த மலைச்சாதி மக்களின் அரசன் ஒருத்தன் வருகின்றான். அவனைப் பார்த்து ஒரு உத்தரவிடுகிறான்.

என்ன உத்தரவு தெரியுமா?

பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டு பிடிக்கவில்லையானால் உன்னுடைய தலையை வெட்டிவிடுவோம்.

இது தான் அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழித்தார்.

இந்த நேரத்தில் அந்த மலைச்சாதியினர் அவரைச் சுற்றி சுற்றி வந்து பயங்கரமாக முழித்துக்கொண்டு நடனமாடுகிறார்கள்.

தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டு வரும் அவர்களை இவர் திகிலுடன் பார்க்கிறார். நேரம் ஆகஆக தன்னுடைய இறுதி நேரம் நெருங்குவதை உணர்ந்தார். மிகவும் நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றிச்சுற்றி ஆடுபவர்களைக் கவனித்தார். அவர்களுடைய கைகளில் ஈட்டிபோன்ற ஓர் ஆயுதம் இருந்தது. அந்த ஆயுதத்தை இவருடைய கண்ணுக்கு நேராகக் கொண்டு வந்தார்கள். அதை அவர் பார்த்தார். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனித்தார்.

அந்தக் கூரான முனையில் ஒரு சின்ன துவாரம் தெரிந்தது. உடனே அவருக்குப் பளிச்சென்று ஒரு ஐடியா வந்தது. இதைத் தானே இவ்வளவு காலமும் நான் தேடிக்கொண்டிருந்தேன். கூரான முனையில் ஒரு சின்ன துவாரத்தைக் போட்டு விட்டால் அதன் மூலமாக நூலைச்செலுத்தி மறுமுனையை மெஷினில் வைத்து விடலாமே. தையல் மெஷின் ஊசி ரெடி என்று நினைத்தார்.

திடீரென்று தூக்கம் கலைந்த உடனே தன் தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார். இது எப்படியென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம் தான்.

முழித்துக்கொண்டிருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடை கிடைப்பதுண்டு. உங்களில் பலருக்கு இப்படியான அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தந்தச் செயல் நம்முடைய நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயற்றிட்டத்தை எந்தளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்கமுடியும். அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவருடைய எண்ணம் முழுவதும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினைத்தது கனவில் உருவாகி அதற்கு செயல்வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சொல்கிறார். தூக்கத்தை அக்கபூர்வமாகப் உபயோகப்படுத்துவதெப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள். பயிற்சியெல்லாம் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைக் பற்றி இலேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு தூக்கத்தில் நடக்கின்ற வியாதி இருந்தது. அதற்காக மருந்து எடுத்துக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அவரைப் பார்த்துக்கேட்டேன்.

ஏங்க... தூக்கத்தில் நடக்கிற வியாதிக்கு மருந்து உள்ளெடுக்குறீங்களே..... ஏதாவது முன்னேற்றம் தெரியுதா? என்று கேட்டேன்.

தெரியுது என்றார்.

எப்படி என்றேன்.

முன்பெல்லாம் தூக்கத்தில் 10 அடிவரைக்கும் நடப்பேன். இப்பொழுது 40 அடிவரைக்கும் நடக்கிறேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்கிரமடையும் போர்

## பலி எண்ணிக்கை 2700 ஆக உயர்வு

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் மீண்டும் ரொக்கெட்களை ஏவி தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டிய இஸ்ரேல் அரசு, கெய்ரோவில் கடந்த வாரம் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தையை இரத்து செய்துவிட்டு காஸா மீது மீண்டும் குண்டு மழை பொழிய ஆரம்பித்தது.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் 49 ஆவது நாளை எடடியுள்ள நிலையில் இஸ்ரேல் மீது நேற்று ஹமாஸ் படையினர் 38 முறை ரொக்கெட்களை வீசி தாக்கியதாகவும், இஸ்ரேலிய போர் விமானங்கள் காஸா பகுதியில் நடத்திய தாக்குதலில் 8 பேர் பலியானதாகவும் அங்குள்ள போர் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இதனைத் தொடர்ந்து, கடந்த 49 நாட்களாக காஸா பகுதி மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தரை வழி, கடல்வழி மற்றும் வான்வழி தாக்குதல்களில் பலியான பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை மட்டும் 2 ஆயிரத்து 700 ஐ கடந்துள்ளது.

இவர்களில் 70 சதவீதம் பேர் அப்பாவி பொதுமக்கள் என்றும் சுமார் 500 குழந்தைகள் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாகவும், பத்தாயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. (இ)

# எபோலா நோயாளர்களை மறைத்தால் 2 வருடச் சிறை

## புதிய சட்டம் நிறைவேற்றம்

எபோலோ நோய் தொற்றுக்குள்ளானவர்களுக்கு மறைந்து வாழ உதவி செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்யும் புதிய சட்டமொன்று சியரா லியோன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தை மீறுபவர்கள் இரு வருட சிறைத்தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என அந்நாட்டு நீதி அமைச்சர் தெரிவித்தார். இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தை பெற வேண்டியுள்ளது.

சியரா லியோன் லைபீரியா, கினியா உள்ளடங்கலான மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் நோயால் இது வரை ஆயிரத்து 427 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2ஆயிரத்து 615 பேர் நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

இந்த நோய் பரவுவதை தடுக்க ஐவரிகோஸ்ட் கினியா, லைபீரியாவுடனான தனது எல்லைகளை மூடியுள்ளது. இதையொத்த எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகள் காபொன் செனகல். கமரூன், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எபோலா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்படாத நிலையிலுள்ள "நிழல் வலயம்" என அழைக்கப்படும் பிராந்தியங்களில் உள்ளவர்கள் குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தை சேர்ந்த மருத்துவ கலாநிதி கெயிஜி புகுடா கவலை வெளியிட்டுள்ளார். (இ)

## புதிய தலைவலி

காஸாவில் உள்ள ஹமாஸ் போராளிகளை ஒடுக்குவதற்காக கடந்த 50 நாட்களாக மோதலில் ஈடுபட்டு வரும் இஸ்ரேல் நாட்டுக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தும் விதமாக லெபனான் நாட்டில் இயங்கிவரும் போராளிக் குழுக்களும் இஸ்ரேல் மீது ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.

இஸ்ரேல் - லெபனான் எல்லைப் பகுதியில் உள்ள கிர்யட் ஷ்மோனா மற்றும் மெடுலா நகரங்களின் மீது லெபனான் போராளிகள் 2 ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவித்த இஸ்ரேல், லெபனான் எல்லையோரமுள்ள பகுதிகளில் போர் விமானங்களின் மூலம் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றது. (இ)




# சுவிஸ்லாந்தில் மனைவி கொலை; நியூசிலாந்தில் கணவன் கைது

## 14 வருடங்களின் பின்பு

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் சுவிஸில் தனது மனைவியைக் கொலை செய்துவிட்டு, போலி அடையாளப்படுத்தலுடனும் போலி ஆவணங்களுடனும் நியூஸிலாந்துக்குள் நுழைந்து, அங்கு பிரஜாவுரிமை பெற்று வசித்து வந்தவர் எனக் கூறப்படும் இலங்கைப் பிரஜை ஒருவரை ஒக்லண்ட் பொலிஸார் நேற்று கைது செய்திருக்கின்றனர் என நியூஸிலாந்து வானொலி அறிவித்தது.

கிரேலின் என்ற சிறு வர்த்தக முயற்சியாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரை சுவிஸில் வசித்து வந்தவர் எனக் கருதப்படும் இந்நபர் சுவிஸின் பாஸில் நகர்ப் பகுதியில் வைத்து 2000 டிசம்பரில் தனது மனைவியான 23 வயது பெண்ணைக் கொலை செய்து விட்டு 2001 பெப்ரவரியில் போலியான அடையாளப்படுத்தல் மற்றும் பயண ஆவணங்களுடன் நியூஸிலாந்துக்குள் நுழைந்து, 2004 ஆம் ஆண்டு அந்த நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நபரைக் கைது செய்த சமயம், நியூஸிலாந்து உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அவருக்கு ஒரு கடிதம் வழங்கப்பட்டது. அதில் அவருக்கு வழங்கப்பட்ட பிரஜாவுரிமையை உள்நாட்டலுவல்கள் அமைச்சு விலக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நியூஸிலாந்துக்கும் சுவிஸுக்கும் இடையில் ஆட்களை நாடு கடத்துவதற்கான ஒப்பந்தம் ஏதும் இல்லாவிடினும், இந்தக் கைது நடவடிக்கையுடன் மேற்படி சந்தேக நபரை அவர் முன்னர் வசித்த சுவிஸுக்கு திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன என்று தகவல் வெளியிட்டன.

மேற்படி சந்தேகநபரின் அடையாளத்தை சரியாக உறுதிப்படுத்தும் முயற்சிகளை 2011 ஆம் ஆண்டிலேயே இரண்டு நாடுகளின் அதிகாரிகளும் இணைந்து ஆரம்பித்திருந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. (இ)

# ஈவிரக்கமற்ற ஐ.எஸ்.ஐ.எஸ் நவிப்பிள்ளை கடும்கண்டனம்



ஈராக்கில், இஸ்லாமிய அரசினை சுய பிரகடனம் செய்து கொண்டுள்ள இயக்கமும் அதன் கூட்டாளிகளும் மோசமான, பரவலான, திட்டமிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையர் நவநீதம்பிள்ளை கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இரக்கமற்ற விதத்தில், இன மற்றும் மதக் குழுக்களை அழிக்கும் நடவடிக்கைகள் நடந்துவருவதாக ஓய்வுபெற்று செல்லும் நவிப்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மோசூல் சிறையிலிருந்து ஜூன் மாதம் கொண்டு செல்லப்பட்ட கைதிகள் 670 பேரின் படுகொலைகள் மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முஸ்லிம் அல்லாதவர்கள் தனியாகக் கொண்டுசெல்லப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, கொல்லப்பட்டுள்ளதாகவும் நவிப்பிள்ளை கூறியுள்ளார்.

குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# எபோலாவுக்கு பரீட்சார்த்த மருந்து வழங்கத் தயார்

## ஜப்பான் அறிவிப்பு

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா தொற்றுநோயை எதிர்கொள்வதற்காக, பரீட்சார்த்த வைரஸ் எதிர்ப்பு மருந்தொன்றை வழங்கத் தயாராக உள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

T-705 அல்லது அவிகான் (Avigan) என்ற ஒருவகை சளிக் காய்ச்சல் மருந்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் இன்னும் அனுமதி வழங்கவில்லை.



எபோலாவுக்கு எதிராக இந்த மருந்து தொழிற்படுமா என்பதில் இன்னும் தெளிவில்லை. ஆனால், குறித்த வைரஸ் தொற்றுகளுக்கு இடையே உள்ள ஒத்த இயல்புகள் காரணமாக, இந்த மருந்து பயனுள்ளதாக அமையும் என்றே அதனைத் தயாரிக்கும் நிறுவனம் கூறியுள்ளது. இதனிடையே, அமெரிக்காவின் பரீட்சார்த்த மருந்தொன்றைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த மருத்துவர்கள் மூவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டதாக லைபீரியா தெரி வித்துள்ளது.

எபோலா சிகிச்சையில் பரீட்சார்த்த மருந்துகளை பயன்படுத்துவது, மருத்துவ நெறிமுறைகளின் படி சரியானது தான் என்று சர்வதேச நிபுணர்கள் குழுவொன்று ஏற்கனவே தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆப்கானின் புதிய ஜனாதிபதி செப்.2 ம் திகதி பதவியேற்பு

ஆப்கானிஸ்தானின் புதிய ஜனாதிபதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி பதவியேற்பார் என திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் உதவியுடன் தலிபான்களின் ஆட்சியில் இருந்து மீண்ட ஆப்கானிஸ்தான், நிலையான ஜனநாயக ஆட்சியை அமைக்க கடுமையாக போராடி வருகின்றது.

அந்நாட்டின் புதிய ஜனாதிபதி இம்மாதம் 2 ஆம் திகதி பதவி ஏற்றிருக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி தேர்தலுக்கான முதல் சுற்றின் இறுதியில் பெரும்பான்மை வாக்குகள் எவருக்கும் கிடைக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது சுற்று வாக்குப்பதிவில், முறைகேடுகள் இடம் பெற்றதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அங்கு இதுவரை எவரும் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்க முடியவில்லை.

இந்நிலையில், அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதிய ஜனாதிபதி பதவியேற்பார் என தற்போதைய ஜனாதிபதி கர்ஸாய் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை மதிக்கும் தன்மை வடக்கில் அதிகமாகவுள்ளது

## பிராந்திய இறைவரித் திணைக்கள ஆணையர் புகழாரம்


வடக்கில் சட்டத்தினை மதிக்கும் தன்மை அதிகம் காணப்படுவதாக மட்டக்களப்பு மற்றும் யாழ்.மாவட்ட பிராந்திய உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளர் மு.கணேராசா தெரிவித்தார்.

சுய மதிப்பீட்டு வரி செலுத்துனர்களினை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றையதினம் (நேற்று) சுய மதிப்பீட்டு வரி செலுத்துவோரில் 15 இலட்சம் ரூபா, 10 இலட்சம் ரூபா வருடாந்தம் செலுத்வோருக்கு கௌரவிப்பு இடம்பெறுகின்றது.

இவர்களுக்கு எந்த இடத்திலும் முன்னுரிமை அழிக்கப்படுவதோடு கௌரவ பிரஜைகளாகவும் கருதப்படுவர். மற்றும் 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் குறையாது தொடர்ந்து 10 வருடத்திற்கு வரி செலுத்துவோருக்கு வாகன வரியில் கழிவுண்டு.

குறிப்பிட்ட காலத்திற்குள் திரட்டுப்பணம் செலுத்துவோர் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதோடு தண்டப்பணம் செலுத்துவதிலிருந்தும் விடுபடுவார்கள் என்றார் அவர். (இ




# மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு

## வைத்தியசாலை பணிகள் ஸ்தம்பிதம்; நோயாளர்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் பணிபுரியும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் ஒன்றியத்தினர் நேற்று முதல் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மருந்துவழங்குபவர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், எக்ஸ்ரே கதிர்ப்பிரிவினர் மற்றும் இயன் மருத்துவப் பிரிவினர் (பௌதீக சிகிச்சைப் பிரிவினர்) ஆகியோரே தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நோயாளர்களின் நலன்கருதி அவசர சிகிச்சைப் பிரிவுகளில் மட்டுமே பணிகளில் ஈடுபடுவர் என நிறைவுகாண்மருத்துவவியல்தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

உயர் வகுப்பு பதவிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அடிப்படையில் வழங்கவேண்டும், டிப்ளோமா ஆட்சேர்ப்பை நிறுத்தி பட்டதாரிகளை நியமனம் செய்ய வேண்டும், மருந்துக் கலவையாளர் நியமனத்தை நிறுத்தி மருந்தாளர்களை நியமிக்க வேண்டும் என்பன உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற அதேவேளை போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வழக்கிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இப்பணிப்புறக்கணிப்பு போராட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு இதனால் பெருமளவிலான நோயாளர்கள் பாதிப்பினை எதிர்நோக்கியுமுள்ளனர். (இ-4)




# வாளுடன் கைதானவரிடம் தொடர்கிறது விசாரணை

## பொலிஸார் தகவல்

கூரிய வாள் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு திங்கட்கிழமை பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் அல்வாய் முத்து மாரியம்மன் கோவிலடி அல்வாய் வடக்கினை சேர்ந்த 27 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொடர்பாக அப்பிரதேச மக்களால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு இரகசிய தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்ததுடன் அவர் வசமிருந்த வாளினையும் பறிமுதல் செய்தனர்.

மேலும் சந்தேக நபர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு வரும் நிலையில் மேற்படி நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபருக்கும் வாள்வெட்டுக் குழுக்களுக்குமிடையில் தொடர்புகள் உள்ளனவா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

யாழ்.மாவட்டத்திலுள்ள சுய மதிப்பீட்டு வரி செலுத்துவோரினை கௌரவிக்கும் நிகழ்வு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 9 வர்த்தகர்களுக்கு தங்க அட்டையும் 12 வர்த்தகர்களுக்கு வெள்ளி அட்டையும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். வருடமொன்றுக்கு 5 இலட்சம் ரூபா வரி செலுத்துவோருக்கு வெள்ளி அட்டையும், 10 இலட்சம் ரூபா செலுத்துவோருக்கு தங்க அட்டையும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- உ.சாளின்)



### கதிர்வீச்சு சிகிச்சை இடம்பெறமாட்டாது

தெல்லிப்பழை புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தில் உள்ள கதிரியக்க மூலத்தை மாற்றுவதற்கான பணிகள் இடம்பெறவுள்ளதால் நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு புற்றுநோயாளர்களுக்கான கதிர்வீச்சு சிகிச்சை இடம்பெறமாட்டாது என யாழ். பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவராணி தெரிவித்துள்ளார். (இ

### 30 ஆம் திகதியே இடம்பெறும்

பருத்தித்துறை மத்தியஸ்த சபையின் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் மத்தியஸ்த சபையின் விசாரணைக்குழுவின் விசாரணைகள் இவ்வாரத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறமாட்டாது.

அதற்கு பதிலாக 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலையில் இடம்பெறவுள்ளது என பருத்தித்துறை மத்தியஸ்த சபைத்தவிசாளர் என்.குணசீலன் அறிவித்துள்ளார். (இ-60)

# பாரபட்சமற்ற முறையில் வாழ்வாதார உதவிகள்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல வருட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. இதனால் மக்களின் வாழ்விடங்கள் தொடக்கம் அடிப்படை வாழ்வாதார உதவிகள் வரையிலான பல்வேறு தேவைகள் இப்பகுதி மக்களுக்கு தேவைப்படுகிறது.

இவை அனைத்து மக்களுக்கும் பாரபட்சமற்ற வகையில் கொடுக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நாவற்குழி மகிந்தபுரம் குடியிருப்பு பகுதியில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் மக்களுக்கு நிரந்தர காணி உரிமப்பத்திரங்கள் மற்றும் வீடுகள் புனரமைத்து கொடுத்து மக்களை வாழ்வாதாரத்தில் மேம்பாடடைய செய்வதற்காக அண்மையில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பின்போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்கள் அனை வரும் ஒரே பகுதியில் வாழ்வதாக இருந்தால் அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படுவது இலகுவாக இருக்கும். ஆனால் யாழ்.மாவட்டம் பரந்துபட்ட பல்வேறு பகுதிகளைக்கொண்டிருப்பதால் மக்களது வாழ்வாதாரங்களையும் தேவைகளையும் நிறைவு செய்து கொடுப்பது மிகவும் சவாலான விடயமாகவுள்ளது.

இத்தகைய தேவைகளுக்கு குடாநாட்டிலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதால்தான் எத்தகைய கடினமான விடயங்களாக இருந்தாலும் அதை இலகுவாக செய்து முடிக்க கூடியதாகவுள்ளது.

இப்பகுதிக்கு அனைத்து விதமான உதவிகளும் தேவைப்படுகின்றன. இவர்களது தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம், வீதிகள் போன்றன செப்பனிடும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கோள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இதுவரை 25 ஆயிரம் வீடுகள் மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இனங்காணப்பட்டுள்ள பலருக்கு வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படிப்படியாகத்தான் இவற்றை மேற்கொண்டு நிறைவு செய்து கொடுக்க முடியும். வாழ்வாதார திட்டங்கள் கொடுக்கப்படுவதில் முன்னுரிமை அடிப்படையில்தான் திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படும். இதில் மிக வறிய மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இப்பகுதியில் நிரந்தரமாக வாழ்பவர்களது தரவுகள் திரட்டப்பட்ட பின்னர் வீடுகளுக்கான உரிமப்பத்திரங்கள் வழங்க ஏற்பாடு செய்து தரப்படும். நிச்சயமாக இப்பகுதியை மிகக்குறுகிய காலத்தில் மிகச்செழிப்பான பிரதேசமாக மாற்றியமைத்து தரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகளில்

# உளழல்



இந்தியாவில் 1993 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகள் அனைத்தும் 'நியாயமான வெளிப்படையான' முறையில் இடம்பெறவில்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

அந்த நிலக்கரி ஒதுக்கீடுகள் அனைத்தும் சட்டவிரோதமான முறையில் நடைபெற்றுள்ளதாகவும், வழிகாட்டு நெறிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்றும் இந்திய தலைமை நீதிபதி ஆர்.எம்.லோதா, நீதிபதி மதன்.பி.லோகுர் மற்றும் நீதிபதி குரியன் ஜோஸப் ஆகியோர் அடங்கிய அமர்வில் தெரிவித்துள்ளது.

இந்த நிலக்கரி சுரங்கங்களை உடனடியாக இரத்து செய்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்பதால் இந்த நிலக்கரி சுரங்கங்களை இரத்து செய்யும் உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்கவில்லை.

மாறாக இந்த நிலக்கரி சுரங்கங்களை மறு ஒதுக்கீடு செய்யத் தேவையான வழிமுறைகளை ஆராய, ஓய்வுபெற்ற முன்னாள் நீதிபதி தலைமையிலான குழுவை நியமிக்கும்படி உச்சநீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது. இது வெறும் பரிந்துரையே என்றும், இதைவிட சிறந்த திட்டம் இந்திய அரசிடம் இருக்குமேயானால் அதனை உச்ச நீதிமன்றம் பரிசீலிக்கும் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் திகதியன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினமே இந்த சிறப்புக் குழுவை அமைக்க வேண்டுமா என்பது குறித்தும், இந்த நிலக்கரி சுரங்கங்களை மறுஒதுக்கீடு செய்யத் தேவையான வழிமுறைகள் குறித்தும் உச்சநீதிமன்றம் மேலும் விசாரணை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிலக்கரி ஒதுக்கீடு முறைகேடுகள்

கடந்த 1993-2004 காலப்பகுதியிலும் 2006-2009 காலப்பகுதியிலும் மத்திய அரசுக்குச் சொந்தமான நிலக்கரி சுரங்கங்களை தனியாருக்கு ஒதுக்கீடு செய்வதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக வெளியான குற்றச்சாட்டுகள் தொடர்பில் மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ இதுவரை மூன்று ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்தி முடித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட வழக்குகளை சி.பி.ஐ பதிவு செய்துள்ளது. (இ)

## வறுமையின் கொடுமை

# 3 பிள்ளைகளை கொன்றுவிட்டு தாயும் தற்கொலைக்கு முயற்சி!



திருப்பூர் கோவில் வழிப்பிள்ளையார் நகர் பகுதியை சேர்ந்தவர் ராஜசேகர். இவரது மனைவி ராஜேஸ்வரி (வயது 26). இவர்களுக்கு தருண் (3), கவின், கவி என்ற ஒன்றரை வயது இரட்டை குழந்தைகள் இருந்தனர். குடும்ப பிரச்சினை காரணமாக ராஜசேகரும், ராஜேஸ்வரியும் கடந்த சில மாதங்களாக பிரிந்து வாழ்கின்றனர்.

குடும்பத்தை நடத்துவதற்காக ராஜேஸ்வரி பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வாடகை வீட்டில் தங்கி 3 குழந்தைகளையும் வளர்த்து வந்தார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று மாலை வீட்டிலிருந்த தண்ணீர் தொட்டிக்குள் தனது 3, குழந்தைகளையும் தூக்கி வீசி கொன்றுவிட்டு ராஜேஸ்வரியும் குதித்து தற்கொலைக்கு முயன்றார்.

உயிருக்கு போராடி கொண்டிருந்த ராஜேஸ்வரியை மீட்டு திருப்பூர் அரசு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

### கடிதம்

தற்கொலைக்கு முயன்ற ராஜேஸ்வரி எழுதி வைத்திருந்த கடிதம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அதில் திருப்பூர் கோவில் வழிப்பிள்ளையார் நகரில் வசிக்கும் சொக்கலிங்கம் (வயது 40) என்பவரிடம் 3 இலட்சம் ரூபா சீட்டு போட்டிருந்தேன்.

அவர் அந்த பணத்தை தராமல் ஏமாற்றிவிட்டார். இதன் காரணமாக கடனில் தத்தளிக்கிறேன்.

வரதட்சனை கொடுமை காரணமாக என் கணவரை பிரிந்து வாழ்வதும் வேதனையாக உள்ளது. எனவே, வாழ்வதை விட தற்கொலை செய்வதே மேல் என்று முடிவு செய்துள்ளேன் என்று எழுதியிருந்தார்.

இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் இறந்து போன மூன்று குழந்தைகளின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். (இ)




# நீதிபதிகள் நியமன சட்ட வரைவுக்கு எதிரான மனு அனைத்தும் தள்ளுபடி

இந்தியாவில் நீதிபதிகள் நியமனத்திற்கான தற்போதைய நடைமுறையை மாற்றியமைக்கும் இந்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுநல மனுக்கள் மீதான விசாரணையை தற்போதைக்கு ஏற்க முடியாது என்று கூறி இந்திய உச்ச நதிமன்றம் அந்த மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துள்ளது.

இந்திய நீதிபதிகளை நியமனம் செய்வதற்கான அமைப்பை உருவாக்கும் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்திற்கான சட்ட முன்வரைவு இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேறியுள்ளது.

எனினும் இந்திய ஜனாதிபதியின் ஒப்புதல் இன்னும் வழங்கப்படாதுள்ளமையால், தற்போது இது தொடர்பான விசாரணையை தொடங்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

இது தொடர்பில் நான்கு பொது நல மனுக்கள் தொடுக்கப்பட்டிருந்தன.

புதிய முறைப்படி நீதிபதிகளை நீதிபதிகளே நியமனம் செய்யும் முறையை மாற்றி, மொத்தமாக 6 பேரை உள்ளடக்கிய ஒரு ஆணையம் அமைக்கப்படவுள்ளது.

அந்த ஆணையத்தில் தலைமை நீதிபதியை தவிர, 2 உச்சநீதிமன்ற நீதிபதிகளும், மத்திய சட்டத்துறை அமைச்சரும் இடம்பெறுவார்கள். அவர்களோடு 2 முக்கியஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆணையத்தின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள்.

ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டமைப்பால் டில்லியில் நடத்தப்பட்ட 68 ஆவது இந்திய சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியின் போது தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய லோதா, இந்த புதிய ஆணையத்துக்கு எதிரான கருத்தை வெளியிட்டிருந்தார்.

நாட்டில் நீதித்துறை, நிர்வாகத்துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகியவை பரஸ்பரம் ஏனைய துறையினரின் பணியில் தடையை ஏற்படுத்தாமல் செயலாற்ற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பின்னர் இந்த பொது நல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது தள்ளுபடி ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கை வசமுள்ள படகுகளை இம்மாத இறுதிக்குள் மீட்போம்

## மத்திய இணை அமைச்சர் உறுதி

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப் பட்டுள்ள தமிழக மீனவர்களின் 62 படகுகளை இம்மாத இறுதிக்குள் மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய இணை அமைச்சர் பொன்.இராதா கிருஷ்ணன் உறுதியளித்துள்ளார்.

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப் பட்டிருந்த தமிழக மீனவர்கள் 94 பேர் சமீபத்தில் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட மீனவர்களில் சிலர், நேற்று மத்திய இணை அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணனைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.அதன் பின்னர் அவர்கள்செய்தியாளர்களிடம்பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பது குறித்து பொன். இராதாகிருஷ்ணனிடம் பேசினோம்.

வெளிநாடு சென்றுள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நாடு திரும்பியதும் இதுகுறித்து தான் நேரில் சந்தித்து பேசுவார் என்று எமக்கு உறுதியளித்துள்ளார்.அத்துடன் இம்மாத இறுதிக்குள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எங்கள் 62 படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுப்பார் என்றும் அவர் எம்மிடம் உறுதியளித்தார்.

இதேவேளை, இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்து 29 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ள பேச்சில் தமிழகப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உயர்நிலைக்கூட்டத்தில் இந்திய வெளியுறவுத் துறையைச் சேர்ந்த இரண்டு உயரதிகாரிகளும், இரண்டு வல்லுநர்களும் இடம்பெற்றுள்ளனர். அத்துடன் தமிழக மீன் வளத்துறை செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட உயரதிகாரிகள் குழுவும் இடம்பெறும் என்று தெரிகிறது. (இ)



தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தலைமையில் டெசோ அமைப்பின் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று அவசரமாக கூடிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமுதாயத்திற்கென நல்லவற்றை சாதிக்கத் துடிக்கும் மனிதனுக்கு களைப்பாற நேரம் ஏது?
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் முதலமைச்சர் விக்கி பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டும்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதீதமான தெய்வ பக்தி உள்ளவர். பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக அவர் இருந்த போதிலும் தனது இளமைப் பருவத்தில் ஆத்ம ஞானத்தைத் தேடி அலைந்தவர்.

ஞானவான்களைத் தந்த ஞானபூமியாகிய இந்திய தேசத்தின் தலைமையை மிகப் பெரும்பான்மையான பலத்துடன் பொறுப்பேற்கும் மிகப் பெரும் சந்தர்ப்பம் மோடிக்கு இருந்தமைக்கு அவரின் ஆத்ம ஞானபலமே காரணம் எனலாம்.

எனவே இந்தியப் பிரதமர் மோடி தன்னைச் சந்திப்பவர்களின் மனநிலைகளைப் புரிந்து கொள்ளக் கூடிய மனோபலம் மிக்கவர் என்பதையும் அவர் பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் அவரின் அணுகு முறைகளின் நுட்பங்கள் தொடர்பிலும் பிரதமர் மோடியை எவரும் ஏமாற்ற முடியாது என்பதும், பிரதமர் மோடி எவரையும் ஏமாற்ற மாட்டார் என்பதும் புலனாகும்.

இந்த அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்த சலனமும் இல்லாமல் பிரதமர் மோடி சந்தித்திருந்தார். இலங்கை ஜனாதிபதியின் அனுமதி இல்லாமல் கூட்டமைப்பை பிரதமர் சந்திக்கமாட்டார் என சுப்பிரமணிய சுவாமி கூறிய வார்த்தைகள் செய்தியாக வெளிவந்த கையோடு கூட்டமைப்பினரை மோடி சந்தித்ததன் மூலம் 'நான் தனித்துவமானவன்' என்ற செய்தியை பிரதமர் மோடி இலங்கைக்கு மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

எனவே, மன்மோகன் சிங்கின் ஆட்சியில் எதிர்பார்த்த எதனையும் பிரதமர் மோடியின் ஆட்சியில் இலங்கை அரசு எதிர்பார்க்க முடியாதென்ற உண்மை இலங்கை ஆட்சியாளர்களுக்கு மிகப் பெரும் கடுப்பை ஏற்படுத்தியிருக்கும்.

இது ஒரு புறம் இருக்க எங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் நிறைந்த ஆத்மபலம் உள்ளவர். எங்கள் கூக்குரல் அரசியல்வாதிகள் மத்தியில் அவர்களைச் சமாளித்து நடப்பது கூட அவரின் ஆத்மபலம் என்றே கூறவேண்டும்.

கூட்டங்களில் முன்வைக்கின்ற கருத்துக்கள், அரசின் போக்கை நாகரிகமாக விமர்சிக்கும் தன்மைகள், வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றும் பேரவாவைச் சமாளித்துச் செல்லும் நுட்பங்கள் என அனைத்தும் அவரின் ஆத்மபலம் கொடுத்த தைரியம் எனலாம்.

அரசியல் ஊடான அறிமுகம் எதுவும் இல்லாமல் இரண்டு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் விருப்பு வாக்குகள் பெற்று வடக்கின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள், ஆத்மபலம் மிக்க இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்கும் போது இருவருக்கு மிடையில் மிக நெருக்கமான உறவு நிச்சயம் ஏற்படும்.

தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துயரங்களைப் பிரதமர் மோடிக்கு விக்னேஸ்வரன் எடுத்துக் கூறும் போது அதனைச் செவிமடுக்கும் அவதானிப்பு மிக அதிகமாகவே இருக்கும் எனலாம்.

அது மட்டுமன்றி, மீண்டும் மிகவிரைவில் நாங்கள் சந்திப்போம் என்று பிரதமர் மோடி கூறும் அளவில் நிலைமை மாறும். எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பிரதமர் மோடியையும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் நிச்சயம் சந்திக்க வேண்டும். இச் சந்திப்பு மிக விரைவில் இடம்பெறுவது காலத்தின் முதன்மைத் தேவை.

இந்தியப் பிரதமரின் அலுவலகம் சந்திப்புக்கு அழைப்பு விடும் என்று காத்திராமல் வடக்கின் முதலமைச்சர் சந்திப்புக்கான கோரிக்கையை முன்வைக்கலாம்.

வடக்கு மாகாண அரசு என்பது தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் பேசுகின்ற அனைத்து அதிகாரத்தையும் கொண்ட தமிழ் அரசு.

எனவே, பிரதமர் மோடியை வடக்கின் முதல்வர் சந்திக்கின்ற போது அதனால் ஏற்படுகின்ற மாற்றங்கள் எங்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்பது சத்தியம்.

# ஈழத்தமிழர்களின் ஆட்சி அதிகாரம் அரசியல் தீர்வில் அக்கறையில்லாதவர்கள் கரங்களில்

## முன்னாள் எம்.பி.சுட்டிக்காட்டு

மக்களின் அபிவிருத்தியிலும் அரசியல் தீர்வுகளிலும் அக்கறையின்றி இருப்பவர்களின் கரங்களில் தமிழர்களின் ஆட்சி அதிகாரம் கொடுக்கப்பட்டமையால் தான் வட மாகாண மக்கள் இன்று இத்தகைய துன்பகரமான வாழ்க்கைக்குள் விழவேண்டி வந்தது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒழுங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிராமத்தின் அபிவிருத்தியும் மக்களின் வாழ்வாதார சீரமைப்புக்குமான கூட்டம் அரியாலை கிழக்குப்பகுதி மக்களால் ஒழுங்குசெய்யப்பட்டு சனசமூக நிலைய மண்டத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட பகுதிக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாண அரசானது நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் பெற்றுத்தரக்கூடிய அதிகாரத்தை கொண்டுள்ளது. மத்திய அரசிடம் இருந்து வருடாந்தம் வரும் நிதிகளை கிடப்பில் போட்டுவிட்டு தேவையற்ற விடயங்களை தூக்கிப்பிடித்து மக்களது வாழ்வாதாரங்களை மேம்பாடடைய விடாது தடுத்து வருகின்றனர்.

1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையானது அன்றைய கால அரசியல் வெற்றிக்காக தூண்டிவிடப்பட்ட ஒரு அரசியல் நகர்வு. அதன் விளைவாக உருவான ஆயுதப் போராட்டம் வலுவான நிலைக்குள் பரிணாமம் கொண்டு வளர்ந்தாலும் அரசியல் ரீதியில் அந்த அமைப்பு திடமான நிலையைக் கொண்டிராமையால் ஒட்டு மொத்த ஆயுதப் போராட்டமும் தமிழர் தரப்பிலிருந்து கைநழுவிப் போய்விட்டது.

எமது இனம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது உதவிக்கு வராத உலக நாடுகள் தற்போது ஐ.நா சபை கொண்டு வந்துள்ள போர்க்குற்ற விசாரணை மூலம் தமிழர்களுக்கான தீர்வை பெற்றுவிடலாம் என்ற மாயையை தற்போது மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உருவாக்கி வருகின்றனர்.

இந்தத் தவறான அரசியல் நகர்வுகளால் தமிழ் மக்கள் மீண்டும் கடந்த கால துன்பகரமான நிலைமைகளுக்கே மீண்டும் தள்ளப்படும் நிலைக்கு வர வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் பொலிஸார் இருவருக்கு காயம்

மொனராகலை, படல்கும்புர பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் மேடையை அமைத்துக்கொண்டிருந்த ஆதரவாளர்கள் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொல்லுகளுடன் வருகைதந்த குழுவினர் தமது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தி, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக மக்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உட்பட சிலர் காயமடைந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணி நேற்று ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு அமைக்கப்பட்ட மேடைக்கு சேதம் விளைவித்த குழுவினர், ஆதரவாளர்களை தாக்கியதாக தகவல் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்த சந்தர்ப்பத்தில், குறித்த குழுவினர் தாக்குதல் நடத்துவதற்கு வருகைதந்ததுடன், துப்பாக்கிப் பிரயோகம நடத்தியதாகவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவியபோது, தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதா? என்பது தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாகவும், சாட்சியங்கள் பதிவுசெய்யப்படுவதாகவும் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் மேலதிக பொலிஸ் குழுக்கள் இரண்டு படல்கும்பர பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் படல்கும்புர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், தாக்குதல் நடத்தியவர்களை அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் ரோஹன தெரிவித்தார். (இ)

## அச்சுவேலி கைத்தொழில்பேட்டை இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புனரமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்ட யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது இன்று 27 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினாலும் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்ஹாவினாலும் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிகழ்விற்கு தலைமை தாங்குவார்.

பிரதி அமைச்சர் வீரக்குமார திசாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

## கலாசாரப் பேரவைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு பிரதேச கலாசார பேரவைக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான சு.முரளிதரன் அறிவித்துள்ளார். (இ

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

. சிங்கர் பினான்ஸ் பி.எஸ்.சி.யாழ் கிளையின் முதலாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து நடத்தவுள்ள இலவச இரத்த தான முகாம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 86, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதால் பங்குபெற விரும்பும் குருதிக் கொடையாளிகள் இணைந்து கொள்ளுமாறு யாழ்.கிளையின் உதவி முகாமையாளர் சி.தனுஷன் அறிவித்துள்ளார். (செ-11)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தற்பெருமை அழிவைத் தரும்



✦ மருத்துவர்கள் நோயாளிகளிடம் "எனக்கு வியாதியே இல்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும்படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அதுபோல, இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகிவிடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

✦ கல்லானது தண்ணீருக்குள் வருடக்கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்துவிடும். அதுபோல திடமான நம்பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

✦ குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும். இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - தெற்கு சமாதான காற்பந்தாட்ட முடிபுகள்



கொழும்பில் டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி காற்பந்தாட்ட அணிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளின் காற்பந்தாட்ட அணிகளுடன் சிநேகபூர்வ காற்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றியது.

வடக்கு தெற்குப் பாடசாலை அணிகளுக்கிடையில் நட்புறவு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கங்களுக்காக இந்தக் காற்பந்தாட்டப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

சேனநாயக்கா கல்லூரி கடந்த 37 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளுடன் காற்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தது. அதன் பின்னர் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றியுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 13, 15, 17 மற்றும் 19 வயதுப்பிரிவு அணிகளுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டிகளில் பங்குபற்றின.

தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியுடன் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் போட்டிகளில் பங்குபற்றியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சேனநாயக்கா கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 13 வயதுப்பிரிவில் 2:0 என்ற கோல் கணக்கிலும், 15 வயதுப்பிரிவில் 3:2 என்ற கோல் கணக்கிலும், 17 வயதுப்பிரிவில் 7:0 என்ற கோல் கணக்கிலும், 19 வயதுப்பிரிவில் 5:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றன.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சேனநாயக்கா கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில், 13 வயதுப்பிரிவில் சேனநாயக்கா கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கிலும், 15 வயதுப்பிரிவில் மகாஜனாக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கிலும், 17 வயதுப்பிரிவு ஆட்டம் 1:1 என்ற சமநிலையிலும், 19 வயதுப்பிரிவில் மகாஜனாக் கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றன. (க)

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III சென்றலைட்ஸ் வெற்றி



இலங்கை கிரிக்கெட் பிரிவு 3 இற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து ஓர் அணியைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 35.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக நோபட் 38 ஓட்டங்களையும், முரளி 18 ஓட்டங்களையும், லிவிங்ரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் வாதுஷன் 3 இலக்குகளையும், டார்வின் 2 இலக்குகளையும், எரிக்துஷாந்தன், கிரிசாந் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

110 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 17.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

இதில் ஜேம்ஸ்யண்சன் 26 ஓட்டங்களையும், ஸ்ரிபன் ராஜ் 21 ஓட்டங்களையும் மயூரன் மற்றும் டார்வின் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 18, 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்ழக அணி சார்பில் லிவிங்ரன் 3 இலக்குகளையும் நிதர்சன ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (க)

# அமெரிக்க ஓபன் டெனிஸின் 2 ஆவது சுற்றில் சரபோவா, ஜோகோவிக்




இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்சிலாம் போட்டியான அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

2006 ஆம் ஆண்டு சம்பியனும், உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையுமான மரியா ஷர போவா (ரஷியா) தொடக்க சுற்றில் சக நாட்டைச் சேர்ந்த கிரி லென் கோவை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6:4, 6:0 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இரண்டாம் நிலை வீராங்கனையான ஷிமோனா ஹெலப் (ருமேனியா) தொடக்க சுற்றில் 6:7 (2:7), 6:1, 6:2 என்ற கணக்கில் போராடி வென்றார்.

மற்ற ஆட்டங்களில் 4 ஆம் நிலை வீராங்கனை ரட்வன்ஸ்கா (போலந்து), 6ஆம் நிலை வீராங்கனை கெர்பர் (ஜெர்மனி), வோஸ்னியாக்கி (டென்மார்க்), சாரா இரானி (இத்தாலி), பெட்கோவிக் (ஜெர்மனி), ஜெலீனா ஜான்கோவிக் (செர்பியா), வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

உலகின் நம்பர் ஒன் வீரரும், 2011 ஆம் ஆண்டு சம்பியனுமான ஜோகோவிக் (செர்பியா) முதல் சுற்றில் அர்ஜென்டினாவை சேர்ந்த டியாகோவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிக் 6:1, 6:2, 6:4 என்ற நேர்செட் கணக்கில் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



3 ஆம் நிலை வீரரான வாவ் ரிங்கா (சுவிட்சர்லாந்து) 6:2, 7:6 (8:6), 7:6 (7:3) என்ற கணக்கில் வெஸ்லியையும் (செக்குடியரசு), 8 ஆம் நிலை வீரரும், 2012 ஆம் ஆண்டு சாம்பியனுமான ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) 6:3, 7:6 (8:6), 1:6, 7:5 என்ற கணக்கில் ராபின் ஹாஸையும் (நெதர்லாந்து) தோற்கடித்தனர்.

மற்ற ஆட்டங்களில் 5 ஆம் நிலை வீரர் ரோஸ்னிக் (கனடா), 9 ஆம் நிலை வீரர் சோங்கா (பிரான்ஸ்), ராபர்ட்டோ (ஸ்பெயின்) ஆகியோர் வென்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர். (க)

# இளவாலை ஹென்றியரசர் வெற்றி



வடக்கு - தெற்கு நட்புறவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 15 வயதுப் பிரிவு மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியை தோற்கடித்து வெற்றி கண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. டினேஷன், டிசாந்தன் ஆகியோர் தமது அணிக்கான கோல்களை அடித்தனர்.

17 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றனர். அவ்வணி வீரர் மதுஷன் தனது அணிக்கான கோலினை அடித்தார். (க)

# இன்றைய ஆட்டம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவு 2 இற்கான அரையிறுதியாட்டம் இன்று புதன் கிழமை கொழும்பு புளுபில் புற்றரை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஏ அணியை எதிர்த்து கொழும்பு றோயல் கல்லூரி பி அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து உத்தியோகபூர்வமாக புற்றரையில் முதன் முறையாக விளையாடும் வாய்ப்பினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# டோனியின் வரம்பை மீறிய கருத்தால் கடுப்பானது இந்திய கிரிக்கெட் வாரியம்

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக கோப்பை போட்டி வரை பயிற்சியாளர் டங்கன் பிளெட்சர் தான் இந்திய அணியின் பாஸ் என்று கப்டன் டோனி கூறியது புதிய சர்ச்சையை கிளப்பி உள்ளது. சமீபத்தில் இங்கிலாந்துடன் நடந்த டெஸ்ட் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி படுதோல்வி அடைந்ததால், பயிற்சியாளர் பிளெட சரை நீக்க வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலரும் வலியுறுத்தினர்.

தலைமை பயிற்சியாளர் பிளெட்சரை ஓரங்கட்டும் வகையில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்ட நிலையில், முதல் ஒருநாள் போட்டிக்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய கப்டன் டோனி கிரிக்கெட் வாரியத்தில் நிலைக்கு முரண்பட்ட கருத்தை வெளிப்படுத்தினார். அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் இணைந்து நடத்தஉள்ள உலக கோப்பை ஒரு நாள் போட்டித் தொடர் வரை பயிற்சியாளர் பிளெட்சர் தான் இந்திய அணியின் பாஸ்' என்று டோனி கூறினார்.



இதனால் கிரிக்கெட் வாரியம் கடும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், டோனியின் கருத்து பற்றி அடுத்து செயற்குழு கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும் என்றும் தெரிகிறது. இது குறித்து கிரிக்கெட் வாரிய நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

டோனி தனது வரம்பை மீறி கரு த்து தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் இது போன்று தேவையில்லாத விஷயத்தை பேசுவதை ஏற்க முடியாது. அணியில் இடம்பெறும் வீரர்கள் பற்றி முடிவு செய்வது கப்டனின் உரிமை.

அதே போல நிர்வாகி களை நியமிப்பது வாரியத்தின் உரிமை.

மிக மோசமான முன்னுதாரணமாக அமைந்துவிட்ட இந்த பிரச்சினை குறித்து அடுத்து நடக்க உள்ள செயற்குழு கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் பிரதேசங்களிற்கு...

யங்கள் சிங்களவர், தமிழர் என்ற இரு சமூகத்தினரையும் அரவணைக்கின்றன. இதன காரணமாக ஓர் ஐக்கியம் காணப்படுகின்ற போதிலும் யுத்த அனுபவங்கள் அந்த சமூகங்களிடையே பிளவை ஏற்படுத்தியுள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் விஜயம் இது போன்ற பிரச்சினைகளுக்கு திருப்புமுனையாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் என அந்த இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## முன்னாள் போராளி...

டறியப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், வவுனியா புனர்வாழ்வு மையத்தில் 109 பேருக்கு தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ஒரு வருடகால பயிற்சிகளை முன்னெடுக்கும் இவர்கள் அடுத்த வருடத்தின் நடுப் பகுதியில் விடுவிக்கப்படுவார்கள் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மீளாய்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல ஜகத் விஜேதிலக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஈழக் கனவை...

அழுத்தங்கள் மற்றும் சூழ்ச்சித் திட்டங்களுக்கு சரியான வெளியுறவுக் கொள்கைகளின் மூலம் ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் சில மேற்குலக நாடுகள் செயற்பட்டு வந்தன.

ஜனாதிபதியின் அனுபவம் மிக்க சிறந்த தலைமைத்துவம் காரணமாக நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டில் பயங்கரவாதம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. எனினும் புலம்பெயர் தமிழ் சமூகம் இன்னமும் ஈழக் கனவுகளை கைவிடவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

உலகின் பல பாகங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாரியளவில் உயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (செ-11)

## விகாரைக்கு...

பிரதேசமாக அடையாளமிட உத்தேசிக்கப்பட்டுள்ள 500 ஏக்கர் காணியை எல்லையிட்டு அடையாளமிடுவதற்கான அதிகாரிகள் நேற்று செவ்வாய்கிழமை காலை மூன்றாவது தடவையாக பொலிஸ் பாதுகாப்புடன் அங்கு சென்றிருந்தனர்.

அளவீட்டு பணிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு விரைந்த பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் அளவீட்டு பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதற்கு எதிரான ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் கடும் வாக்குவாதங்கள ஏற்பட்டன.


இதையடுத்து கலவரம் அடக்கும் பொலிஸார் உட்பட பெரும் தொகையிலான பொலிஸார் புல்மோட்டைப் பகுதிக்கு வந்து சேர்ந்ததாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ரமலான் அன்வர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சில மணித்தியாலங்கள் அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. இதன் போது உள்ளூர்வாசியொருவர் காயமடைந்ததாக கூறப்படுகின்றது.

அரிசிமலையை அண்மித்த பொன்மலைக்குடா, வீரந்தீவு மற்றும் தேத்தாவடி தீவு ஆகிய கிராமங்களை ஊடறுக்கும் வகையிலேயே இந்த நில அளவை மேற்கொள்ளப்பட விருந்ததாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்ற காணி மற்றும் பயிர்நிலங்களை தவிர்த்து காணி அடையாளமிடப்படும் என சில வாரங்களுக்கு முன்பு அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் வழங்கப்பட்ட இது தொடர்பான உறுதி மொழியும் உத்தரவாதமும் மீறும் வகையிலே காணியை அளவீடு செய்ய முற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். (செ-11)

# பாகிஸ்தானை வென்றது இலங்கை



இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் இலங்கை 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. அம்பாந்தோட்டை சூரியவெவ மஹிந்த ராஜபக்ஸ மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 310 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணித் தலைவர் அஞ்ஜலோ மத்தியூஸ் 93 ஓட்டங்களையும் மஹேல ஜயவர்தன 67 ஓட்டங்களையும் பெற்று அணியை வலுப்படுத்தியதோடு, திஸர பெரேரா அதிரடியாக துடுப்பெடுத்தாடி 36 பந்துகளில் 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக வஹாப் ரியாஸ் 4 விக்கெட்டுக்களையும் மொஹமட் ஹபீஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

311 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி 44 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் துடுப்பாட்டத்தில் மொஹமட் ஹபீஸ் 62 ஓட்டங்களையும், அஹமட் ஷேசாட் 56 ஓட்டங்களையும் பெற்



றுக்கொடுத்தனர். பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் 5 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியின் பந்து வீச்சில் திஸர பெரேரா 3 விக் கெட்டுக்களையும், சீக்குகே பிரசன்ன, லசித்மலிங்க மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர். தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியினை பதிவு செய்து சமநிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 30-ம் திகதி தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் திஸர பெரேரா தெரிவானார். (க)

## வங்கப்புலி 'வைட்வோஷ்'

மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை 3:0 என வைட்வோஷ் செய்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியதீவுகள் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டினேஷ் ராம்டின் 121 பந்துகளில் 169 ஓட்டங்களையும் டரன் ப்ராவோ 124 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 258 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். மூன்றாவது விக்கெட்டுக்காக பெறப்பட்ட உலக சாதனை இணைப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக அல் அமின் ஹொசைன் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முஸ் பிகீர் ரகீம் 72




ஓட்டங்களையும், தமீம் இக்பால் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியதீவுகள் அணியின் பந்து வீச்சில் ரவி ராம்போல் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். போட்டியின்நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் ரவி ராம்போல் தெரிவு செய்யப்பட்டார். (க)

## காணாமல்...

ஒன்றும் வெளியிடப்பட்டு ஜனாதிபதிக்கும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## ஐ.நா.பொதுச்...

நியமித்துள்ள விசாரணைக்குழுவுக்கு இந்தியா வர மத்திய அரசு நுழைவு அனுமதி வழங்க வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, மத்திய, மாநில அரசுகள் இணைந்து தமிழக மீனவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றை வலியுறுத்தும் வகையில் செப்டெம்பர் 3-ம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று டெசோ அறிவித்துள்ளது. (செ-11)

## அரசியல்...

க்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தனர்.

கச்சதீவை மீட்பதன் மூலமே இந்த பிரச்சினையை தீர்க்க முடியும் என்றும் அவர்கள் தமது மனுக்களில் குறிப்பிட்டிருந்தனர்.

இதன்போது மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி முக்குல் ரொஹாட்கி, கச்சதீவை மீட்பதற்காகவே இலங்கையுடன் போர் செய்ய முடியுமா? என்று கேள்வி எழுபபினார்.

அத்துடன் இரண்டு நாடுகளுக்கு இடையிலான இந்தப் பிரச்சினையில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் அவர் வாதிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம், பிரச்சினையை அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் தீர்க்குமாறு மத்திய அரசாங்கத்துக்கு உத்தரவிட்டது. (செ-11)

# மரண அறிவித்தல்

## இராசையா யோகநாதன்



கரணவாய் சோளங்கனைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Gossau St.Gallenஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா .யோகநாதன் கடந்த 21-ம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராசையா-இலச்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பாலசிங்கம்-குலமணி தம்பதிகளின் அருமை மருமகனும் , பாலநந்தினியின் அன்புக் கணவரும் அபிஷாந்தின் அன்புத் தந்தையும், திரவியநாதன், சறோஜா, ஜெயக்குமார், ஜெயந்திமாலா, பாஸ்கரன், சிறிதரன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு Friedhofeldli, Gerold Jung, Feldlistrasse 18, 9000 St.Gallen என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- உள்நாடு:-(சிறிதரன்) 021 226 2087
வெளிநாடு:- மனைவி (பாலநந்தினி) 0041713831356

தகவல்:-
குடும்பத்தினர் (தம்பி)

(இ-8299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரதேசங்களிற்கு...

புறக்கணிக்கக் கூடாது என்றுஅவர்கருதுகிறார்

400 வருடங்களுக்குமேற்பட்ட பழைமை வாய்ந்த மடுத்தேவாலயம் நல்லிணக்கத்திற்கான அடையாளமாக மாறியுள்ளது.

ஆயுத மோதல்களின் போது இந்தத் தேவாலயம்பாதுகாப்பு வலயமாகப் பாதுகாக்கப்பட்டது.

இப் போதும் தமிழர்கள், சிங்களவர்கள் என்ற பேதம் இன்றி அனைவரும் ஒன்றுகூடும் இடமாகவும் அது உள்ளது.

இதனால் சமூக, அரசியல், மத ஒற்றுமை குறித்த செய்தியை சொல்வதற்கான மிகப்பொருத்தமான இடமாக மடுத் திருத்தலமே அமைந்து காணப்படுகிறது.

மடு தேவாலயத்திற்கான பரிசுத்த பாப்பரசரின் விஜயம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின்தற்போதைய நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவியாகவிருக்கும் என உலகதமிழர்பேரவையின் தலைவர் எஸ்ஜே. இமானுவேல் அடிகளார் தெரிவிக்கிறார்.

தமிழ் மக்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பு ஆட்சியின் கீழேயே வாழ்கின்றனர். அவர்கள் இன்னமும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், ஒடுக்குமுறை போன்ற மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இலங்கையில் கிறிஸ்தவ தேவால

19 ஆம் பக்கம் பார்க்க....


பிறந்தநாள், திருமண பலூன் வளையங்கள் செய்யும் அலங்கரிப்பாளர்களின்

**கவனத்திற்கு!!!**

எம்மிடம் பிறந்தநாள் போன்ற விசேட வைபவங்களுக்கு கட்டும் பலூன் வளையங்களுக்குப் பயன்படுத்தும் தரமான பலூன்கள் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்குண்டு

நாடவேண்டிய இடம்: (C-8278)

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி. 021-222 2567



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக காங்கேசன் துறை வீதியில் (K.K.S.Road) அமைதியான சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு : 071 845 4015

(7503)



## புலமை கடல் - 2015

தரம் - 5 மாணவர்க்கானது

- இலங்கையின் புகழ்பூத்த ஆசிரியர்களின் சிறப்பான எதிர்பார்க்கை வினாக்கள்.
- 11 மாதாந்த வெளியீடு.

(7502)

விரைவில் : இலங்கையின் சகல புத்தக சாலைகளிலும்



## A/L CHEMISTRY

- Day Classes
  ஆரம்பம்:02.09.2014
- அலகுரீதியான மீட்டல்
- 10 Years F.W.C Paper
- 10 Years Past Paper

2015 - அயன் சமநிலை
2016 - வெப்ப இரசாயனம்

(7504)

ஆசிரியர்: திரு.சு.சுரேஸ்குமார்
B.Sc (Hons) MBA (Lon)

**The SCIENCE CORNER**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



## பதவி வெற்றிடங்கள்

எமது Optimo Group Sri lanka நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் 03 புதியகிளைகளுக்கு O/L, A/L படித்த துடிப்பானவர்கள் தேவைப்படுகின்றனர்.

- வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் உண்டு. பயிற்சியின் போது 14,000 /- பின் 40,000 /-
- வயதெல்லை 18-35 : தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

உடன் அழைக்க :-

077 879 4077, 077 556 6224

(C-8299)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்..



## கட்டார் மற்றும் சவூதி ராஜ்யத்தில் முதல் தடவை வெளிநாடு செல்லும் சாரதிகளுக்கான உடனடி வேலைவாய்ப்பு (First Time Driver)

International School - (10 பேர்) 1200 + Accommodation
saudi Al Azmil company (10 பேர்) 1100 + 200 + OT

- Qatar - garden Helper Age 40 - 55 - 900 + OT
- Qatar - meson Helper Age 30 - 45 - 1300 +

தங்குமிடம், மருத்தும் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்துக்குள் பயணம். வெளிநாட்டு அனுபவம் உள்ள Gulf valid Licence சாரதிகளுக்கு அதிக சம்பளம். எதிர்வரும் வெள்ளிக்கிழமை Colombo இல் Interview நடைபெறும்.

உடன் தொடர்பு கொள்ள :
யாழ்ப்பாணம் : Lanka voice, Jaffna. 077 952 7575
மன்னார், வவுனியா : Lanka voice 26/2 station road Vavuniya. 076 669 7789



உயர்தர தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான (Surreging)

மாபெரும் **அளவையியல் கருத்தரங்கு**

- முற்றுமுழுதான பாடக்குறிப்புக்கள்
- எதிர்பார்க்கப்படும் பரீட்சை வினாக்கள்
- செயன்முறைகள்

காலம்: 29.08.2014 (வெள்ளிக்கிழமை) நேரம்: 8.00 – 5.00

ஆசிரியர்: Mr.T.Ram

இடம்:– **BEACON** வெலிங்டன் சந்தி

தொடர்பு: 0778429817 பிரவேசம் இலவசம்

(C-8291)



## வீடு வாடகைக்கு

மந்திகை சிலையடி மில் ஒழுங்கையில் (புற்றளையில்) சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 981 0961

(C-8300)



## FRENCH MOVIES – JAFFNA

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

**THE MINISTER**

A minister of transport, an road accident - and power struggle.
(2011, 115 min.)

on Thursday 27 August 2014 at 4:00 p.m.

at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 0212228093

(7500)

French language. English subtitles. Free entrance.



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும். இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

(C-8293)

28.08.2014 @ 9.00 am
30.08.2014 @ 8.00 am
01.09.2014 @ 3.00 pm
03.09.2014 @ 9.00 am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 0714299935



## NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road-Brown road Junction, Jaffna.
Tel: 077 336 4055
web:www.physicsocean.com Email: info@physicsocean.com

For 2014 A/L...

### DAY CLASSES

| | | |
|---|---|---|
| பௌதீகவியல் | : | R.குகன் |
| | | R.குமரன் |
| இரசாயனவியல் | : | டயஸ் |
| | | T.சிவகுமார் |
| உயிரியல் | : | S.பொன்திவாகரன் |
| | | V.உமாசங்கர் |

ஆரம்பம்: 01.09.2014 திங்கள்
(திங்கள் - வெள்ளி)

குறிப்பு: மாணவர்களுக்கான தங்குமிடவசதிகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

(C-8290)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.